பக்கங்கள்: பனனிாண்டு

...stered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 26 | சனிக்கிழமை | (08-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 141

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
♦ விரைவானது ♦ பாதுகாப்பானது ♦ நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
☞ வங்கிக்கணக்கு அவசியமில்லை
☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
☞ 365 நாள் சேவை
☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச.முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 7310, 021 222 7555, 021 222 7560
Fax 021 222 7310
E-mail: thirumurugan@eudoramail.com

# பாலா நேற்று வன்னிவருகை

# பிரபாவுடன் மந்திராலோசனை



(கிளிநொச்சி)

**கடந்த ஒருவருட காலமாக இடை நிறுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் தொடர்ந்து நடத்துவது தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றுக் கிளிநொச்சியில் பேச்சுகள் நடத்தியுள்ளார்.**



லண்டனில் இருந்து நேற்று அதிகாலை 5.55 மணிக்கு கட்டு நாயக்கா விமான நிலையத்தை வந்த டைந்த அரசியல் ஆலோசகர் கலா நிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதி களை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் வர வேற்று விமானப் படைக்குச் சொந் தமான விசேட உலங்கு வானூர்தி மூலம் வன்னிக்கு அனுப்பி வைத் தார்.

நேற்றுக் காலை 7.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு அரங்கை வந்தடைந்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத் தையும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கத்தையும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணை அர சியல் துறைப் பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ நீதித் துறைப் பொறுப்பாளர் பரா மற்றும் முக்கிய தளபதிகளும் போராளிகளும் பொது மக்களும் வரவேற்றனர்.

கிளிநொச்சி வந்தடைந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை மீது கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பஸ் நிலையத்திற்கு அருகில் அதிரடிப்படை முகாம் மீது நேற்று மாலை 7.25 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் சம்பவ மொன்று இடம் பெற்றுள்ளது.

இக்குண்டுத்தாக்குதல் சம்பவம் காரணமாக பொலிஸ் இன்ஸ் பெக்டர் ஒருவர் உட்பட இரண்டு அதிரடிப்படையினர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தையடுத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் அங்கு நிலைமையைப் பார்வையிட் டுள்ளனர். (ந)

## பேச்சுக்களை தொடர்வதற்கு முன்

# ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைக்கின்றது நோர்வே

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் சமா தானப் பேச்சுக்களை ஆரம்பிப்ப தற்கு முன்னர் நோர்வே சமாதான அனுசரணையாளர்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்திடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத் திருக்கிறார்கள் எனத் தெரியவருகி றது.

* பேச்சுவார்த்தைகள் விடு தலைப் புலிகளுடன் மாத்திரம் இடம் பெறவேண்டும்.

* வெளிநாட்டு உதவிகளைப் பெறும் நோக்கத்திற்காகப் பேச்சு வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது.

* பேச்சுக்களுக்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற் றுக் கொள்ள வேண்டும்.

*குறித்த ஒரு நேர அட்டவணைக் குள் ‹ பேச்சுவார்த்தைகள் முடியு மென உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

*விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால வரைபின் அடிப்படையில் பேச்சுக் கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

என்ற கோரிக்கைகளே அரசி டம் நோர்வேத் தரப்பால் முன்வைக் கப்பட்டவையாகும்.

இதேவேளை, பேச்சுக்கள் ஆரம் பிக்கப்பட முன்னர். அரசுக்கும் விடு தலைப் புலிகளுக்குமிடையில் பரஸ் பரம் நம்பிக்கை கட்டியெழுப்பப் படுவது அவசியமானதென்றும் நோர்வேத் தரப்பு சம்பந்தப்பட்ட தரப்பினருக்குச் சுட்டிக்காட்டியுள் ளது. (இ-6)

## கருணா அணி உரிமை கோரியது

(கொழும்பு)

மட்டக்களப்பு தன்னாமுனை யில இரு புலி உறுப்பினர்களையும் கருணா அணியினரே நேற்று முன் தினம் சுட்டுக் கொன்றதாக இணையத் தளமொன்று நேற்றிரவுசெய்தி வெளி யிட்டது.

கருணா அணியினருக்குச் சார் பாக செய்தி வெளியிடும் அவ்விணை யத் தளத்திலேயே கருணா அம்மா னால் தண்டனை வழங்கப்பட் டதாக செய்தி வெளியாகியுள்ளது. (இ)

## மட்டக்களப்பு காத்தான்குடியில்

# ஆயுதங்களுடன் இளைஞனை பொலிஸார் கைது செய்தனர்

(மட்டக்களப்பு)

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் காத்தான் குடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அப்பகுதி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செயதுள்ளனர்.

புதிய காத்தான்குடி தொலை தொடர்பு வீதியைச் சேர்ந்த நாகூர் பெகூர் அமீர் என்பவரையே பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதிவான் எஸ். சின்னையா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவரை எதிர்வரும் 20ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டுள் ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# மகசின் சிறைச்சாலையில் உயிராபத்து வேறு சிறைக்கு எங்களை மாற்றுங்கள்

## தமிழ் அரசியல் கைதிகள் கிஷோர் எம்.பிக்கு உருக்கமான கடிதம்

(கொழும்பு)

கொழும்பு மகசின் சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோருக்குத் தொலை நகல் மூலம் உருக்கமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

ஏழு சிறைக் கைதிகள் கையொப் பமிட்டு அனுப்பியுள்ள அக் கடி தத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

பல்வேறு சிரமங்களின் மத்தி யில் நாம் சிறையில் வாழ்கிறோம் எங்களைக் களுத்துறைச் சிறைச் சாலைக்கு உடனடியாக மாற்றுங் கள்; சிறைச்சாலை ஆணையாளரைச் சந்திக்க முயற்சி செய்த போதி லும் அது கைகூடவில்லை. தின மும் 23 மணித்தியாலங்கள் நாங் கள் சிறையில் பூட்டப்படுகிறோம். இதனால் உடல் நிலை மோசமா கப் பாதிக்கப்பட்டுள்ளது. கண் பார்வை குன்றி வருகின்றது.எங்க ளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மிகவும் மோசமாக நடந்து கொள்கின்றனர். இதனால் எங்க ளுக்கு உயிராபத்து ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் அக்கடிதத் தில் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை இது விடயம் தொடர் பாக சிறைச்சாலை ஆணையாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிகள் இரு பிரிவாகச் செயற்படுவர்

(நமது நிருபர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் பாராளுமன்ற உறுப்பினர் இரண்டு கூறுகளாகப் பிரிந்து ஐக்கிய தேசி யக் கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் ஆதரவு வழங்கவிருப்பதாக காங்கிரஸ் வட் டாரங்களில் இருந்து தெரியவந்து ள்ளது.

பத்து உறுப்பினர்களைக் கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நான்கு உறுப்பினர்கள் வன்னி மாவ ட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணிக்கு ஆதரவு வழங்கவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசுக்குத் தாமும் மற்றும் நஜீப் அப்துல் மஜீப், அமீர் அலி, பைசர் ஹாசிம் ஆகியோரும் ஆதரவு வழங்கப் போவதாகக் கட்சித் தலை வர் ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்து அவரது அனுமதியையும் பெற்றுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இரகசியத் தொடர்புகளை அரசு புலிகளுடன் பேணுகிறது

## ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி தமிழீழ விடுதலைப் புலிக ளுடன் இரகசியமாகத் தொடர்பு களை வைத்துள்ளது என ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது. இது பற்றி ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உடுவே தம்மலோக தேரர் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் எதிர்க் கட்சியில் இரு ந்த போது ஐ.தே.மு அரசு புலிக ளுடன் இரகசியத் தொடர்புகளை பேணி வந்துள்ளதென குற்றஞ் சாட்டிவந்தன. ஆனால் தற்போது அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் அதையே தாமும் செய்கிறார்கள். பேச்சுக்கள் ஆரம்பமாக முன் சகல கட்சிகளுடன் கலந்து ரையா டப்படுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுதியளித் திருந்தது. ஆனால், இப்போது என்ன நடைபெறுகிறது என்று தெரிய வில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

# குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த யுனிசெவ் உபகரணங்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் விதமாக யுனிசெவ் நிறுவனம் 71 ஆயிரம் டொலர் பெறுமதியான உபகரணங்களைப் பொலிஸ் தலைமையகத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

கணனிகள் தொடர்பு சாதனங்கள், மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் என்பன இவற்றுள் அடங்கும்.

பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உரையாற்றிய யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இது குறித்து கூறுகையில்,

இவ் உபகரணங்கள் சிறுவர்கள் தொடர்பான குற்றச் செயல்கள் சம்பந்தமான புள்ளிவிபரங்களைப் பேணுவதற்கு உதவிபுரியும்.

அத்துடன், வருங்காலத்திலும் இவ்வாறான உதவிகள் வழங்கப்படுமெனவும் உறுதியளித்தார்.


பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா உரை நிகழ்த்துகையில், நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ உத்தி யோகத்தர்கள் சிறந்த பணியாற்றி வருகின்றனர். பொலிஸ் நிலையங்களில் 200 ற்கும் அதிகமான சிறுவர் மற்றும் மகளிர் கருமபீடங்கள் இயங்குகின்றன. சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிர யோக நடவடிக்கைகளை ஒழிக்க விரைவில உறுதியான திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படவுள்ளன எனத் தெரிவித்தார். (உ-61,8)

# புங்குடுதீவு மக்களுக்காக போராட்டம் நடத்துவேன்

## ரவிராஜ் எம்.பி. உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 4ஆம் வட்டாரம் "நுணுக்கல்" என்ற கிராமத்தில் கடந்த 4ஆம் திகதி முன்பள்ளி பாடசாலையை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் திறந்து வைத்தார்.



திறந்து வைத்து அவர் நிகழ்திய உரையில்,

தமிழ்த் தேசியம் வலுவான வளர்ச்சியடைய வேண்டுமானால், நாட்டில் மக்கள் முன்னேற வேண்டுமானால் ஒவ்வொரு கிராமமும் பல துறைகளில் நிறைவு பெற்று முன்னேற வேண்டும். இந்நோக்குடன் சிறார்களுக்கு முறைப்படி கல்வியூட்டல் முக்கியம்

மேலும், புங்குடுதீவு மக்களின் அவசிய தேவையான மாவட்ட அரசினர் மருத்துவமனையை முறைப்படி இயங்க வைப்பதற்கு அதற்குரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவற்றை செய்வேன். அது கைகூடாமல் போனால் புங்குடுதீவு மக்களுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவேன் என உறுதியாகக் கூறினார்.

த.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புங்குடுதீவு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளர் இடகைச்செல்வன், மருத்துவப் பொறுப்பாளர் வண்ணன், கிராம அலுவலர் விநாயகமூர்த்தி, சமூகத் தொண்டன் கருணாகரன் ஆகியோர் பங்கேற்றனர். (உ)

# மீனவர் மீதான கெடுபிடிகளை கண்டித்து மக்கள் போராட்டம்

(மருதங்கேணி)

யாழ் மாவட்டத்தில் கடற்தொழிலாளர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற அடாவடித்தனங்கள் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர்களை ஒன்றிணைத்து வெகுஜனப் போராட்டம் ஒன்று நடாத்தப்படும் என யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் மாவட்ட வளம் மிக்க கடற் பரப்புக்களை தமது கடல் வலய பாதுகாப்பு நடை முறையின் கீழ் முடக்கி வைத்துள்ள கடற்படையினர் கடற்பிரதேசங்களில் தொழில் புரியச் செல்லும் மீனவர்கள் மீது பாஸ் நடைமுறை, சோதனை கெடுபிடிகள், கடலுணவு பறிமுதல் எனப் பல அடாவடித்தனங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் காலத்தில் படையினர் பாதுகாப்பு நடவடிக்கை என்ற போர்வையில், மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகள் யுத்தநிறுத்த மீறலாகவும் அடிப்படை மனித உரிமை மீறலாகவும் காணப்படுகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு புதிய அரசாங்கம் மீனவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணத் தவறின், பல்லாயிரக் கணக்கான மக்களைத் திரட்டி குடாநாடு தழுவிய வெகுஜனப் போராட்டம் ஒன்று நடத்தப்படுமெனஅவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (உ-35)

# விபத்தில் இருவர் பலி

(புத்தளம்)

அநுராதபுரம் தம்புள்ள வீதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் ஸ்தலத்தில் பலியாகினர்.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளொன்றும், கனரக லொறியொன்றும் நேருக்கு நேர் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த காமினி செனரத் (வயது -34), ஜயலத் திசாநாயக்க (வயது-38) ஆகிய இருவரும் ஸ்தலத்தில் பலியாகியுள்ளனர்.

கனரக லொறியின் சாரதி கைதி செய்யுப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (உ-15)

# இருவால் வெள்ளிகளை ஒரே நாளில் பார்க்கலாம்

## இன்று முதல் வானில் அதிசயம்

(கொழும்பு)

ஒரே தினத்தில் இரு வால் வெள்ளிகளைப் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் இலங்கையர்களுக்குக் கிட்டியிருப்பதாக வான்பொருள் ஆராய்ச்சிப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அவற்றில் நீட் எனும் வால் வெள்ளி இன்று முதல் காணக்கூடியதாக இருக்கும் என்றும் லீனியா என்னும் வால் வெள்ளி நாளை மறுதினம் தென்படும் எனவும் நவீன தொழில்நுட்ப வியாளர் களுக கான ஆர்தர் சி கிளார்க் நிலையம தெரிவித்திருக்கிறது.

இவ்வாறு இரு வால் வெள்ளிகளை ஒரே தினத்தில் காணக் கூடிய அரிய சந்தர்ப்பம் 93 வருடங்களுக்குப் பின் இம்முறை ஏற்பட்டிருக்கிறது என அந்நிலையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், ஆராய்ச்சியாளருமான பியந்தன ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இவ்விரண்டு வால்வெள்ளிகளையும் தென்மேற்கு வானில் சூரிய அஸ்தமனத்தின் பின் இலங்கையர்கள் பார்வை யிடக் கூடியதாக இருக்கும் என்றும் இவை இரண்டும் எதிர்வரும் 19ஆம் திகதியின பின்பே தெளிவாகத் தென்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-4,63)

# கைதிகளைப் பராமரிக்க மாதம் 8 கோடி செலவு

(கொழும்பு)

சட்ட நடைமுறைகளின் தாமதம் 'காரணமாக சிறு குற்றம் இழைத்த கைதிகள் நீண்ட நாட்கள் .சிறையில் வைக்கப்பட்டிருப்பதை தவிர்த்து அவர்களை விரைவில் விடுதலை செய்வதற்கென சட்ட பூர்வ திருத்தங்களை அமுல்செய்யுமாறு அரசாங்கத்திடம கேட்கப்பட்டுள்ளது.

அரசாங்கப் பகுப்பாய்வாளர்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் 21 ஆயிரத்திற்கும் கூடுதலான கைதிகளில் 10 ஆயிரம் பேர் கணிசமான காலத்திற்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக்கைதிகளின் பராமரிப்பிற்காக மாதாந்தம் தோறும் சுமார் 8கோடி ரூபா செலவிடப்படுவதாக சிறைச்சாலை ஆணையாளர் புறூம் மர்சூத் தெரிவித்துள்ளார். (உ-60,8)

# விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கா மீதான வழக்குவிசாரணையை எதிர்வரும ஜூலை 1-ம் திக திக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தை அவமதித்தது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க மீதும் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான 3 உயர் நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட குழுவினர் நேற்று விசாரணைகளை மேற்கொண்டபோதே இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் திசநாயக்கவுக்கு எதிராக குற்றப் பத்திரிகையை வாசித்தார். எதிரியின் சார்பில் வாதிட்ட சட்டத்தரணி குற்றப்பத்திரிகை வாசிக்கப்படுவதற்கு முன்னராக தமது கருத்தை வெளியிடவிருப்பதாக கூறியதற்கு பிரதம நீதியரசர் ஆட்சேபனை தெரிவித்தார். (உ-8)

# உலக செஞ்சிலுவைத் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஸ்தாபகர் ஹென்றி னொன்ட்டின் பிறந்த தினத்தை யொட்டி உலகளாவிய ரீதியில் 176 நாடுகளிலுமுள்ள தேசிய சங்கங்களிலும் கொண்டாடப்படும் உலக செஞ்சிலுவைத் தின வரிசையில் இன்று சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையிலும் இந் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

யாழ்.கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினிதேவி இளங்கோவன் பிரதம விருந்தினராகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணத் திற்கான வதிவிடப் பிரதிநிதி வேராறடோவிக் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-18)

# கூட்டம்

(இணுவில்)

உடுவில் கமநல சேவைகள நிலையத்தின் இம்மாத நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு குழுத்தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.இக்கூட்டத்தில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம், உலக உணவுத் திட்ட விவசாய அமைப்புக்களின் செயற்பாடுகள், நியாப் திட்டம், சீடா திட்டம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாகப்பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (உ-122)


## நல்லைக் குமரன் மலருக்கான ஆக்கங்கள் 2004 (12)

நல்லைக் கந்தனின் வருடாந்த உற்சவ காலத்தில் வழமைபோன்று எமது குழுவினால் இவ்வருடம் வெளியிடப்படவுள்ள மேற்படி மலருக்குகந்ததும் காலத்தின் தேவைக்கேற்றதுமான தலைப்பில் தரம்மிக்க ஆக்கங்களை எதிர்வரும் 30.06.2004 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி உதவும்படி துறைசார்ந்த அறிஞர்கள், சைவப் பெரியார்கள் மற்றும் கல்விமான்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சைவசமய விவகாரக்குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(C-169)



## பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவு

மே மாதம் 8ஆம் நாள் 2004
சனிக்கிழமை பி.ப. 3.00 மணி
இன்று (08.05.2004)

கைலாசபதி கலையரங்கம்

தலைமை
குழந்தை ம.சண்முகலிங்கம்

வரவேற்புரை
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்

நினைவுரை
'கலையின் அன்பன், கலைஞரின் நண்பன் -வித்தி'
பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்
(நந்தி)

நன்றியுரை
கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா

அரங்க அளிக்கை
வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து
அபிவிருத்திக் குழுவினரின்
கீசகன் வதை
(வடமோடி நாட்டுக் கூத்து)

பேராசிரியர் சு.வித்தியானந்தன்
நினைவு அறக்கட்டளை

# பிளவுண்ட கூட்டணிகளின் விறுவிறுப்பான தேர்தல் பிரசாரம் இன்றுடன் நிறைவடைகிறது

## வீரமுழக்கமிடும் வேட்பாளர்களில் வெற்றிக்கொடி நாட்டுவது யார்?

(சென்னை)

**தமிழகத்திலும் புதுவையிலும் நடந்துவந்த விறுவிறுப்பான தேர்தல் பிரசாரம் இன்று மாலையுடன் முடிவடைகிறது.**

**தமிழகத்தின் 39 மக்களவைத் தொகுதிகள் மற்றும் புதுவைத் தொகுதிக்கு எதிர்வரும் 10 ம் திகதி வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. இந்த இறுதி நேரத்தில் தேர்தல் பிரசாரம் பரபரப்பாக நடந்து வருகிறது.**

**மாறிய கூட்டணி**

தமிழகத்தின் முக்கிய கட்சிகள இரு அணிகளாகப் பிரிந்து இதில் போட்டியிடுகின்றன. தமிழகத்தை ஆளும் அ.தி.மு.கவும், மத்தியில் ஆட்சியில் உள்ள பா.ஜ.கவும் கூட்டுச் சேர்ந்துள்ளன. 33 தொகுதிகளில் அ.தி.மு.க.வும்,புதுவை உட்பட 7 தொகுதிகளில் பா.ஜ.கவும் போட்டியிடுகின்றன.

அனைத்து எதிர்க் கட்சிகளையும் ஒருங்கிணைத்து மெகா கூட்டணியை தி.மு.க. அமைத்துள்ளது. இதில் காங்கிரஸ், பா.ம.க., ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்கசிஸ்ட், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன. தி.மு.க 15 இடங்களிலும், காங்கிரஸ் 10, பா.ம.க 6, ம.தி.மு.க 4, கம்யூனிஸட்டுகள் தலா 2, முஸ்லிம் லீக் 1 என்ற அடிப்படையில் போட்டியிடுகின்றன.

கடந்த 99 ம் ஆண்டு மக்களவைத தேர்தலில் தி.மு.க, பா.ஜ.க, பா.ம.க, ம.தி.மு.க ஆகியவை ஓரணியாகவும் அ.தி.மு.க, காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள் ஓரணியாகவும போட்டியிட்டன. த.மா.கா. தனித்துப் போட்டியிட்டது. அதன் பிறகு நடந்த 2001ஆம் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க.; பா.ம.க., காங்கிரஸ், த.மா.கா. இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஓர் அணியாகவும், தி.மு.க பா.ஜ.க,விடுதலைச சிறுத்தைகள் புதிய தமிழகம் உள்ளிட்ட கட்சிகள் ஓர் அணியாகவும் நின்றன.

இம்முறை எல்லா கூட்டணியிலும் தலைகீழ் மாற்றம ஏற்பட்டுள்ளது. தற்போது அ.தி.மு.க, தி.மு.க, கூட்டணி தவிர விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம், மக்கள் தமிழத் தேசம், தேசிய லீக் ஆகிய கட்சிகள் மக்கள் கூட்டணி என்ற பெயரில் ஐக்கிய ஜனதா தள சின்னத்தில் போட்டியிடுகின்றன.

மேலும் புதிய நீதிக் கட்சி, ஜனதாக் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி போன்றவையும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

திருமாவளவன் போட்டியிடும் சிதம்பரம், கிருஸ்ணசாமி போட்டியிடும் தென்காசி, கண்ணப்பன் போட்டியிடும் ராமநாதபுரம், அப்பாவு எம்.எல்.ஏ போட்டியிடும் நெல்லை ஆகிய தொகுதிகள் தவிர அனைத்துத் தொகுதிகளிலும் அ.தி.மு.க - தி.மு.க.கூட்டணியிடையே கடுமையான இரு முனைப் போட்டி நிலவுகிறது.

மற்ற மாநிலங்களைவிட முன்னதாகவே தமிழகத்தில் கூட்டணி அமைந்து விட்டது. ஆதலால் தேர்தல் பரசாரமும் முன் கூட்டியே தொடங்கிவிட்டது. முன்னைய தேர்தல் பிரசாரங்களுடன் ஒப்பிடும் போது நீண்டகாலத்திற்கு முன்பே இம்முறை பிரசாரம் தொடங்கி விட்டது.

சென்னைக் கடற்கரையிலிருந்து மார்ச் 9ஆம் திகதி தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டார் கருணாநிதி.ஜெயலலிதா அதே இடத்தில் இருந்து தனது பிரசாரத்தைத் தொடங்கினார். கருணாநிதி பிரதமர் வாஜ்பாய்,துணைப்பிரதமர் அத்வானி,பா.ஜ.க. தலைவர் வெங்கைய நாயுடு உள்ளிட்டோர் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணிக்காக தமிழகத்தில் பிரசாரம் மேற் கொணடனர். தி.மு.க. -காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவாக சென்னை தீவுத் திடலில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் சோனியா காந்தி உரையாற்றினார்.

ஹர்கிண்சிங் சுர்ஜீத்,ஏ.பி.பரதன்,சீதாராம் யெச்சூரி,டிராஜா உள்ளிட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களும் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

திரையுலக நட்சத்திரங்களும் பெருமெடுப்பில் இம்முறை தமிழகத்தை வலம் வந்தனர்.

கடந்த 3 நாட்களாகச் சென்னையில் முகாமிட்டுள்ள ... முதல்வர் செல்வி ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோர் இறுதிக் கட்டப் பிரசாரத்தைச் செனனையில் மேற்கொள்கின்றனர்.



தமிழகத் தேர்தல் களத்தில் 23 பெண்கள் உட்பட 571பேர் போட்டியிடுகின்றனர்.4.75 கோடி பேர் வாக்களிக்கின்றனர் .அனைத்துத் தொகுதிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது.

இதேவேளை, நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு முடிவுகளில் சில தேசிய ஐக்கிய கூட்டணிக்கும் இன்னும் சில காங்கிரஸ் கட்சிகளுக்கும் வெற்றி வாயப்பு இருப்பதாகக் கூறியிருக்கின்றன.இந்த நிலையில் வெற்றிக் கொடியை நாட்டப்போவது யார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். (து)

## சோனியாவுக்கு சோதனையாக மாறிய தீவுத் திடல் மேடை

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி பேசுவதற்காக தீவுத் திடலில் மேடை அமைப்பதற்கு வியாழக்கிழமை நள்ளிரவுக்குப் பிறகே காங்கிரஸாருக்கு அனுமதி கிடைத்தது.

பிரதமர் வாஜ்பாய் தமிழக முதல்வர் .ஜெயலலிதா ஆகியோர் பங்கேற்ற பிரசாரக் கூட்டம் தீவுத் திடலில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்றது. அதே திடலில் காங்கிரஸ் தலைவி சோனியா, கலைஞர் கருணாநிதி பேசும் கூட்டம் நேற்று நடந்தது.


வாஜ்பாயும் ஜெயலலிதாவும் பேசுவதற்காக அமைக்கப்பட்ட குண்டு துளைக்காத மேடை, தடுப்பு வேலிகள் போன்றவற்றை அகற்றும் பணி வியாழக்கிழமை முழுவதும் நடந்தது.

அதையடுத்து, வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணிக்குப் பிறகே காங்கிரஸாருக்கு தீவுத் திடல் மைதானத்துக்குள் அனுமதி கிடைத்தது. மேடை அமைக்கும் பணியில் ஏற்பட்ட தாமதத்தால் வியாழக்கிழமை இரவு நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகளும் தொண் டர்களும் சத்திய மூர்த்தி பவனில் குழுமியிருந்தனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாசன்,-அகில இந்திய செயலாளர் சுதர்சன், நாச்சியப்பன் முன்னாள் மாநில தலைவர் குமரி அனந்தன் ,முத்த தலைவர்கள் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் ,சுதர்சனம், எஸ்.ஜி விநாயமூர்த்தி உள்ளிட்டோரும் நள்ளிரவு வரை சத்தியமூர்த்தி பவனில் இருந்தனர்.

குறுகிய கால அவகாசத்தில் மேடை,தடுப்பு வேலிகள், மின் விளக்கு அலங்காரப் பணிகளில் ஈடுபட ஏராளமானோரை அமர்த்தினர். இரவு 12 மணிக்கு பிறகு அவர்கள் தங்கள் பணிகளைத் தொடங்கினர். (து)

## இந்தியச் செய்திகள்



மக்களவைக்கான நான்காவது கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. ராஜஸ்தானின் பார்மர் என்ற தொகுதியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் தங்களது வாக்குகளை அளிக்க ஒட்டக வண்டியில் சென்ற குடிமக்கள்.

## தி.மு.கவுடன் இணைந்தாலும் ம.தி.மு.க. தனித்துவத்தை இழக்காது

(திண்டுக்கல்)

தி.மு.கவுடன் இணைந்து செயல்பட்டாலும் ம.தி.மு.க. அதன தனித்துவத் தன்மையை ஒரு போதும் இழக்காது என, அக்கட்சியின் பொதுச செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.திமு.க.வின் 11ஆம் ஆண்டுத் தொடக்க விழாவையொட்டி, அக் கட்சிக் கொடியை எற்றிவைத்தும், திண்டுக்கல் மக்களவைத் தொகு ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் என்.எஸ்.வி. சிந்தனை ஆதரித்தும் திருமங்கலத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்,

ம.தி.மு.கவின் 9ஆம் ஆண்டுத் தொடக்க விழாவையொட்டி 2002 ஆம் ஆண்டு, ஜூன் 29ஆம் திகதி திருமங்கலத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் சேது சமுத்திர திட்டம் உள்ளிட்ட பல் வேறு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் பேசினேன். அப்பேச்சின் போது 6 முறை நான் குறிப்பிட்டது தமிழகத்தில் உள்ள படித்த இளைஞர்கள் வன்முறைப் பாதைக்குச் சென்றுவிடக்கூடாது என்பது தான்.

ஆனால், தீவிரவாதத்தை ஆதரித்துப் பேசியதாக என் மீதும், ம.தி.மு.க நிர்வாகிகள் எட்டுப்பேர் மீதும் பொடா சட்டத்தின் கீழ் வழக்குப் போடப்பட்டு, 19 மாதங்கள் சிறையில் இருந்தோம்.

பொடா சட்டத்தில் கைதான ம.தி.மு.க.வினர் மீது குற்றம் இல்லை என்று உச்ச நீதிமன்றம் மற்றும் மறு ஆய்வுக் குழு கூறிய பின்னரும் கூட அந்த வழக்கை வாபஸ் பெற தமிழக அரசு தயாராக இல்லை.

விவசாயிகள். தொழிலாளர்கள் பிரச்சினை உள்ளிட்ட பொது மக்கள் பிரச்சினகளுக்காக கைது செய்யப்பட்டு இதுவரை 4 ஆண்டுகள் நான் சிறையில் இருந்துள்ளேன். சில தலைவர்களைப் போல் குற்றங்கள் செய்து ஒருமுறைகூட சென்றதில்லை.

ம.தி.மு.க. பதவிகளுக்காக



உருவானதல்ல. கொள்கைகளுக்காகவும், தமிழக மக்களின் நல்ல எதிர்காலத்திற்காகவும் பாடுபடும் இயக்கம் (து)


# வியட்நாமின் தளபதி வோ

# 50 வருட நிறைவு விழாவில்

# அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

(கோ சி மின்)

ஒரு நாடு எவ்வளவு நவீன ஆயுதங்களையும் வைத்திருக்கலாம் எவ்வளவு பண பல முள்ளதாகவும் இருக்கலாம். ஆனால் அது இன்னொரு நாட்டை ஆக்கிரமிப்பதற்கு உரிமையற்றது. இந்தத் தார்மீக அடிப்படையை மறந்துள்ள அமெரிக்கா, ஈராக்கில் தோற்றடிக்கப்படும். ஏனெனில் சுதந்திரத்தை விட பெறுமதியானது எதுவுமில்லை.



இவ்வாறு கூறி அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்தவர் 50 வருடங்களுக்கு முன் வியட்நாமின் கம்யூனிசத் தலைவர் கோ சி மின்னின் தலைமைத் தளபதியாக நின்று நூற்றாண்டு கால பிரைஞ்சு கால நித்துவ ஆட்சியை முடிவுக்குள் கொண்டு வந்து, பிரைஞ்சுப் படைகளைத் தோற்கடித்த இராணுவ ஜெனரல் வோ குயென் கியாப் .

வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ் வெற்றியின் 50வது நினைவு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வோ மேலும் தெரிவிக்கையில், நாங்கள் பெற்ற வெற்றி வரலாற்றுச் சிறப்பு மிக்கது. அது நமக்கும் முழு உலகத்திற்குமே புதிய பாடத்தை கற்றுத் தருவது! சுதந்திரத்தைவிட பெறுமதியானது எதுவுமே இல்லை என்பது தான் அந்தப் பாடம் என்றார் வோ.

டியன் பியன் ஃபூ என்னும் இடத்தில் சுமார் 55நாட்களாக பிரைஞ்சு இராணுவப் படைகளை சுற்றிவளைத்த வோ உணவு, நீர், ஆயுதங்கள் செல்லதவாறு தடுத்தார். வேறு வழியின்றி பிரைஞ்சு இராணுவம் அவரிடம் சரணநடைந்தது. அதன்பின் சுமார் 20 வருடங்கள் அமெரிக்கா வியட்நாமை ஆக்கிரமித்தது. இறுதியில் விட்நாமியரிடம் தாக்குப்பிடிக்கமுடியாமல் வரலாற்றில் மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்து வெளியேறியது.

1978இல் கம்போடியாவில் நுழைந்த வியட்நாம் இராணுவம் கொடூர ஆட்சிபுரிந்த பொல் பொட்டை வெளியெற்றியது. 1990இல் கம்யூனிஸ் நாடான வியட்நாம் பொருளாதாரமறு சீரமைப்புக்களை செய்யத் தொடங்கியது.

(யே)

# புதிய பணயக கைதி

# அரபுத் தொலைக்காட்சியில்

(பக்தாத்)

பக்தாத்திலுள்ள கூட்டுப்படைத தலைமையகத்திற்கு முன்னால் தற்கொலைக் குண்டுதாரி நடத்திய கார்குண்டு வெடிப்பு அதிர்ச்சியில் இருந்து மீளமுன்பாக அமெரிக்கர் ஒருவரை ஈராக்கின் ஆயுததாரிகள் பணயமாகப் பிடித்து வைத்துள்ளனர் .



பிடிபட்டவர் அபான் மொஹமட் எலியாஸ் என்றும் அவர் ஈராக்கில் பிறந்து அமெரிக்காவில் 20 வருடங்களாக வசித்தவர் என்றும் அல் அரேபியத் தொலைக்காட்சி அறிவித்தது.

அவரதுபடம் அரேபியத தொலைக் காட்சியில் காண்பிக்கப்பட்ட பொழுது அவரது தாயும் சகோதரரும் அதை உறுதிப்படுத்தினர். தற்பொழுது அமெரிக்கக் கம்பனி ஒன்றிற்காக ஈராக்கில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் எஞ்சினியரான எலியாசுக்கு 6 வயதுக்குக் கீழ்ப்பட்ட 3புதல்வர்கள் இருக்கின்றனர்.

தனக்கு பென்ரகனுடன் தொடர்பு இருப்பதாக கண்கள் கட்டப்பட்ட எலியாஸ் தொலைக் காட்சியில் தொரிவித்தார். அவரை விடுவிக்க உதவுமாறு முஸ்லிம் அமைப்புக்களை அவரது உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


(யே)

# 8,600 நெற் கபேக்களை

# சீன அரசாங்கம் மூடியது

(பீஜங்)

கடந்த மாசி மாதம் தொடக்கம் சீன அரசாங்கம் சுமார் 8,600 "நெற்கபே"என்று அழைக்கப்படும் இணையத்தள சேவைகளை வழங்கும் கம்பியூட்டர் நிறுவங்களை மூடியுள்ளதாகச் சீனாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான சின்ஹூவா செய்தி ஸ்தாபனம் அறிவித் துள்ளது.



சட்டவிரோதமாக இயங்கி வந்த இந் நிறுவனங்களால் இளைய சமுதாயத்திற்குப் பாரிய கெடுதல்களே இடம் பெறுவதாக மேலும் குறிப்பிடபபட்டுள்ளது. பாட சாலைகள் இருக்கு மிடத்திலிருந்து 200 மீற்றர் தூரத்திற்குள் இவ்வாறான நிலையங்கள் இயக்கு வதற்கும் தடைவிதிக்கப்பட்டது.

கடந்த வாரம் இரண்டு சிறுவர்கள் சுமார் 48 மணிநேரம் "ஒன் லைன்"சேவையில் கம்பியூட்டர் விளையாட்டுக்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டபின் ரயில்வே பாதையில் உறங்கியதில் ரயிலால் மோதுண்டு இறந்தனர். இதன் பின்னர் குறிப்பிட்ட "நெற்" நிலையத்திற்குச் சீல வைக்கப்பட்டதுடன் இது தொடர்பில் சீன அரசாங்கம் கடும் நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

(யே)


# இந்தோ. தேர்தல்களில்

# கோல்கார் கட்சி முதலிடம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் மக்களவைக்கான இறுதித் தேர்தல் முடிவுகளின் விபரங்களைத் தலைமைத் தேர்தல் ஆணையாளர் ருஸாடி அறிவித்துள்ளார்.

இதன்படி முன்னாள் சர்வாதிகாரி சுகார்ட்டோவின் கோல்கார் கட்சி 21.6 வீத வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்திரியின் இந்தோனேஷிய ஜனநாயகக் கட்சி 18.5 வீத வாக்குகளைப் பெற்று இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கிறது. எதிர்வரும் யூலை மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இம்முடிவுகள் பெரும்பாதிப்பை அவருக்கு ஏற்படுத்தும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுளளனர்.



முன்னாள் ஜனாதிபதி அப்துல், ரஹ்மான் வாஹீடின் தேசிய எழுச்சிக்கட்சி 10.5 வீத வாக்குகளையும், ஐக்கிய அபிவிருத்திக்கட்சி 8.15 வீத வாக்குகளையும், சுசிலோ பாஸ்கின் ஜனநாயகக்கட்சி 7.45 வீத வாக்குகளையும், பி.ஜே.பி கட்சி 7.34 வீத வாக்குகளையும் ஏனையவை 6.44 வீத வாக்குகளையும் பெற்றுள்ளன.

கடந்த ஏப்ரல் 5ம் திகதி நடைபெற்ற மக்களவைத் தேர்தலுக்கான இம்முடிவுகளின் அடிப்படையில் பாராளுமன்றத்தின் 550 ஆசனங்களும் இவ்வாரம் இறுதிக்குள் கட்சிகளுக்குப் பிரித்து வழங்கப்படும் என்றும் தலைமைத் தேர்தல் ஆணையாளர் பத்திரிகையாளர் மாநாட்டில் பகிரங்க அறிவிப்புச் செய்தார்.

(யே)

# களஞ்சிய சாலை விபத்தில்

# 15பேர் மரணம் 19பேர் காயம்

(பெய்ஜிங்)

வெள்ளைப்பூடு மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 30 அடி உயரமான களஞ்சிய அறையின தட்டுக்கள் சரிந்து விழுந்து மூடைகள் மூடியதில் 15தொழிலாளர்கள் மரணமானதுடன், 19பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் சீனாவில் இடம் பெற்றது.

கடந்த வியாழக்கிமை சென்ஸாகி மாகாணத்தின் களஞ்சியத் தொகுதியினுள் மூடைகளை அடுக்கும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது திடீரென மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த தட்டுகள் சரிந்து விழுந்ததிலேயே இவ் அனர்த்தம் ஏற்பட்டது.

களஞ்சியக் கட்டடத்தின் சொந்தக்காரர் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகள் நடைபெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(யே)




# சார்ஸ் நோய்க்கிருமி தொடர்பில்

# ஆய்வு கூடங்களுக்கு எச்சரிக்கை

(வாஷிங்டன்)

கடந்த 2002 வருடம் சீனாவில் திடீரென ஆரம்பமாகி உலகின் பல நாடுகளிலும் பரவி சுமார்8000 பேரைப் பீடித்து, 800பேரைப் பலி கொண்ட சார்ஸ் நோய் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வு கூடங்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது. அமெரிக்கத் தொற்று நோய் கட்டுப்பாட்டு மத்திய நிலையத்தின் போச்சளரான ரொம் ஸ்கின்னர் இது பற்றித் தெரிவிக்கையில், டசின் கணக்கான அமெரிக்க ஆய்வு கூடங்கள் இந நோயககிருமி பற்றி ஆராயந்து வருவதாகவும் இந்த முயற்சியின் போது கடுமையான பாதுகாபபு முறைகளை அவர்கள் கைக்கொள்ள வேண்டு மென்றும் மீள் எச்சரிக்கையோடு கூடிய அறிவுறுத்தல் வழங்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

சீனாவில் மீண்டும் ஆரம்பித்திருக்கும் சார்ஸ் நோய் காரணமாக ஆசிய நாடுகளும், பல ஐரோப்பிய நாடுகளும் பீதியடைந்திருப்பது இதன் மூலம் வெளிப்படையாகவே தெரிகிறது.

(யே)

# ஈராக் கைதிகள் விவகாரத்தால்

# செனட் சபையின் முன் ரம்ஸ்பீல்ட்

(வாஷிங்டன்)



ஈராக்கில் கைதிகள் நிர்வாணமாக்கப்பட்டுக் கேவலமாக நடத்தப்பட்டது தொடர்பில் செனட் சபை விசாரணைகளுக்குப் பாதுகாப்புச் செயலர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் நேற்று முகம் கொடுக்க நேர்ந்தது.



ஈராக்கிய சம்பவம் குறித்து குடியரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், பத்திரிகைகளின் ஆசிரிய தலையங்கங்களும் ரம்ஸ்பீல்ட் பதவி விலகவேண்டும் என்று காரசாரமான கண்டனம் தெரிவித்ததையடுத்து, ஜனாதிபதி புஷ் நேற்றுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

எனது அமைச்சரவையில் அவர் மிக முக்கியமானவர். அவர் பதவி விலக மாட்டார். ஆனால் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் பென்ரகன் என்னை இருளில் வைத்திருந்தது உண்மைதான். ஆயினும் இப்பிரச்சினை தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்று அறிவித்தார்.

பின்னதாக ஜோர்தான் மன்னருடன் தொலைபேசியில் உரையாடிய புஷ், ஈராக்கில் இடம்பெற்ற விவகாரம் தொடர்பில் கவலை தெரிவித்ததோடு, குற்றவாளிகள் நிச்சயமாக நீதியின் முன் நிறுத்தப்படுவர் என்று உறுதி கூறினார். அரபுலகம் ஈராக்கில் நடந்த கொடூரம் குறித்து கடும் சீற்றமடைந்துள்ளது. அமெரிக்க ஆதரவு அரபு நாடுகள்கூட இந்த விடயத்தில் அமெரிக்காவிடம் தமது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(யே)

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர் ஹென்றி டுனாண்ட் பிறந்த தினம் இன்று

தி. உதயசூரியன்
உபதலைவர்
இ.செ.சி. ச. யாழ். கிளை

**1828ம்** ஆண்டு மே மாதம் 8ம் நாள் சுவிஸ் நாட்டில் பிறந்த ஹென்றிடுனான்ட் (**Hentry Dunant**) என்பவர் தான் நேரில் பார்த்து அனுபவித்த யுத்த அவலங்களைக் கருத்திற் கொண்டு, யுத்தததில் காயப்படுவோரைப் பாதுகாக்கவும், இயற்கை அனர்த்தங்களினால அல்லலபடுபவர்களுக்குக் கைகொடுக்கவும் ஆர்வமுற்றுத் தனி மனித முயற்சியினால் முதலில் சிறிய தொரு குழுவை உருவாக்கிப் பணியாற்றத் தொடங்கினார். இச் செயற்பாடானது அது தோனறிய காலத்திலிருந்து அவல நிலைக்கு உட்பட்டு இருப்போரிற்குப் பாதுகாப்பும், உதவியும் வழங்கி வருகின்றது.



சமூகம் தனது நியாயமான பணிக்கேற்ற நிலையில் இருந்து நிலை தடுமாறி சட்டங்கள் மீறப்பட்டு, மனிதனின் இயற்கைச் சூழல் குழப்பத்திற்குட்படுத்தப்பட்டு, அவனது பாதுகாப்பும், சுகாதாரமும், சீவியமும் கூட பயமுறுததப்படும் சூழ்நிலைகள், ஆயுதமேந்திய மோதல்கள், இயற்கையழிவுகள் போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்தகைய வேளைகளில், பாதிக்கப்பட்டோருக்கு உதவியும் பாதுகாப்பும் வழங்கச் செஞ்சிலுவை பாடுபடுகிறது.

செஞ்சிலுவை அமைப்பின் தொடக்கம் உண்மையில் அடக்கமானதும், சிறிய அளவினதாகவுமே அமைந்தது. தற்போது இவ்வியக்கம் 130 மில்லியன் அங்கத்தவர்களையும், 178 தேசிய செஞ்சிலுவைச் செம்பிறைச் சங்கங்களையும், அதன் உலகக் கூட்டிணைப்பான செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் இணைக்குழுவையும் கொண்ட உலகளாவிய ஓர் இயக்கமாக வளர்ந்து செயற்படுகின்றது. சர்வதேச மனித நலநோக்கச் சட்டங்களும் கணிசமான அளவிற் அபிவிருத்தி அடைந்துள்ளன.

1949ம ஆண்டின் ஜெனிவா இணக்க ஒப்பந்தங்களும், அவற்றிற்கான 1977ம் ஆண்டின் மேலதிக முற்குறிப்புக்களும் பல்வேறு சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்டோரின் பாதுகாபபிற்கு வழிவகுக்கின்றன. செஞ்சிலுவை இயக்கத்தினால் ஆற்றப்படும் சேவைகளிற்கும், நிவாரண விநியோகங்களிற்கும், வருடம் ஒன்றிற்கு பலகோடிக் கணக்கான பணம் திட்டமிடப்பட்டு செலவிடப்படுகின்றது.

செஞ்சிலுவை, அதன் மனித நல இலட்சியங்களால் உந்தப் பெற்று வழிநடத்தப்படுகிறது. அதன் செயல்கள், நடவடிக்கைகள் இதற்கான திட்டவட்டமான வெளிப்பாடாக அமைகின்றன. இவ்வியக்கம் தான் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கோ, இனத்துக்கோ, மதத்திற்கோ, பண்பாட்டிற்கோ உரியதன்று என்பதைக் காட்டும் முறையில் உலகம் முழுவதும் விரிந்து பரந்து கிடக்கின்றது. தற்போது உபயோகிக்கப்படும் செஞ்சிலுவைச் சின்னம் 1864 இல் தெரிவு செய்யப்பட்டது. இச்சின்னம் வெள்ளை நிறப் பின்னணியில் சிவப்பு நிறச் சிலுவை ஆகும். அரேபிய நாடுகளில் செம்பிறைச் சின்னத்தையும் இணைத்து இயங்க ஏற்றுக் கொள்ளப்பட்டது.

செஞ்சிலுவை இயக்கம் 7 அடிப்படைக் கோட்பாடுகளைத் தன்னகததே கொண்டு செயற்படுகின்றது. (**Seven Funda mental Principles**)- 1965ல் உருவானது

★மனிதாபிமானம் (**Humanity**)
★பாரபட்சமின்மை(**Impartiality**)
★நடுநிலமை (**Neutrality**)
★சுயாதீனம் (**Independance**)
★தொண்டர் சேவை (**Voluntary Service**)
★ ஒருமைப்பாடு (**Unity**)
★உலகளாவிய தன்மை (**Universality**)

செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவர்களும், தொண்டர்களும் இந்த ஏழு அடிப்படைக் கோட்பாடுகளிறகு கட்டுப்பட்டு சேவை செய்யவேண்டியவர்களாவர். "மனிதாபிமான உந்துதல்" என்பது இவ்வமைப்பில் சேவையாற்றும் அங்கத்தவாகள், தொண்டர்களிற்கு மட்டும் உரியதல்ல. இவர்களது சேவை மூலம் புதிய அங்கத்தவர்களையும், தொண்டர்களையும் உருவாக்கி மேலும் மனிதாபிமானச் சேவைகளை முன்னெடுக்க முடிகின்றது.

1949இல் செய்யப்பட்ட நான்கு ஜெனிவா சாசனங்கள் கீழ்க்காணும் வகையினரை பாதுகாக்க உதவுகின்றன. இச்சாசனங்களை ஏறறு 178 நாடுகள் ஒப்பமிடடுளளன. இலங்கையும் அதனுள் ஒன்றாகும்.

★களத்தில் காயமுற்றவர்கள் அல்லது சுகவீனம் உற்றவர்கள்.
★ கடலில் காயமுற்றவர்கள் அல்லது சுகயீன்முற்ற அல்லது தத் தளிக்கின்ற வீரர்கள்.
★போர்க்கைதிகள்.
★ஆயுதப் போரில சிக்கிய குடி மக்கள்.

ஜெனிவா சாசனம் ஒப்பமிட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியானதை 12.08.1999 அங்கத்துவ நாடுகள் மகிழ்ச்சியுடன் கொண்டாடின.

செஞ்சிலுவை இயக்கமானது மூன்று பிரிவினர்களை (**Three Components** ) கொண்டுள்ளது. அவையாவன,

## *(1) சர்வதேச செஞ்சிலுவைக்குழு*

**(International Committee of Red Cross- ICRC)**

ஜெனிவாவில் இதன் தலைமையகம் உள்ளது. இக்குழுவானது சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஒருதனி நபரினால் உருவாக்கப்பட்டதாயினும இதனுடைய தொழிற்பாடுகளும் முன்னேற்றங்களும் சர்வதேச மயமாகியுள்ளது ச.செ.சிசங்கத்தின் பிரதிநிதிகள் உலகில் 60 நாடுகளில் சென்று வதிவிடப் பிரதிநிதிகளாக கடமை புரிகின்றனர். ஏறத்தாழ1500 ஊழியர்கள் கடமை புரிகின்றனர்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒரு நாட்டில்வந்து செயற்பட வேண்டுமாயின் அந்த நாடு அழைப்பு விடும் பட்சத்திலேயேவந்து செயறபடமுடியும். இலங் கையிலிருந்து 1989இல் அழைப்புகிடைக் கப்பெற்றுவருகை தந்து சேவை யாற்றுகின்றது. கொழும்பில் தனது தலைமையகத்தையும் மற்றும் யாழ்ப்பாணம், மன்னாா,. மடடககளப்புகிளிநொச்சி, மடு, மல்லாவி, மூதூர், புதுக்குடியி ருப்பு, வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில்உப-அலுவலகங்களையும் ஸ்தாபித்து பணியாற்றுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் ச.செ.சி. சங்கம் தனது பணிகளை சர்வதேச மனிதாபிமானச் சட்டங் களுக்கு அமைவாகவும் அடிப்படைக் கோட்பாடுகளுக்கமைவாகவும போரினால் பாதிக்கப்பட்டவர் களுக்கும் பாதிப்படைந்த பகுதியை தரமுயர்த்துவதற்கும் நிவாரண உதவிகள் வழங்கியும் பல்வேறு உதவிகளைச்செய்தும் சிறப்பாக சேவை யாற்றுகிறது. சிறைக் கைதிகளின் பாதுகாப் பிறகும்இவர்களது பார்வை உதவுகிறது இலங்கைச் செஞ்சிலுவைச சங்கம் மூலமாகவும் சில பணிகள் ஆற்றுகிறது. செஞ்சிலுவை அமைப்பின் மூலாதாரங்களாக சர்வதேச செஞ்சிலுவை விளங்குகிறது.

## *2)செஞ்சிலுவை செம்பிறைச சங்கங்களின் சம்மேளனம்*

**(International Federation of Red Cross / Red Cresent -I.F.R.C)**ஜெனிவாவில் தலைமையகம் இயங்குகின்றது.

இச்சங்கமானது 1919இல் உருவாக்கப்பட்டது தேசிய சங்கங்களுக்கு உதவும் கரங்களாக சம்மேளனம் திகழ்கிறது. தேசிய சங்கங்கள் தமது மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி வசதிகளை பெற்றுக் கொடுப்பதும் போரினால் அல்லது இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட் டோருக்கு வேண்டிய பணிகளைச்செய்து வாழ்வி யலை முன்னேற்றுவதற்கும் பிறதேசிய சங்கங்களிட மிருந்து உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு காலத்திற்குக்காலம் பயிற்சிகளை வழங்குவதும் இதன் அடிப்படைக் கடமைகள் ஆகும். கொழும்பில் தலைமையகம் அமைந்து இலங்கையின் தேசிய சங்கத்திறகு மிகுந்த அனுசரணையாளர்களாகப் பணி புரிகின்றனர்.

## *3)தேசிய செஞ்சிலுவை செம்பிறை சங்கங்கள்*

**(Nationl Red Cross / Red Crescent Societies)** இது 1864இல் உருவாக்கப்பட்டது. அரேபிய நாடுகளில் செம்பிறையை உபயோகிக்க சட்டவலுவான உரிமை வழங்கப்பட்டுள்ளது. 178 நாடுகளில் தேசிய சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்குகின்றன. தேசிய சங்கங்கள் நிதியை சர்வதேச செ.சி. சங்கம். செஞ்சிலுவை சம்மேளனம் பிற தேசிய சங்கங்கள் மூலமாகப் பெற்றுச் செயற்படுகின்றன. இதன்னை விட சுயமாக நிதியை மக்களிடமிருந்தும் சேகரிக்கப்படுவதுடன் வருவாய் ஈட்டக் கூடிய திட்டங்களை (**Fund Raising Project**) நடைமுறைப்படுத்துவதன் மூலமும் நிதியைப் பெறுகினறன. தேசிய சங்கங்கள் (**National Society**) அந்நாடுகளின் அரசாங்கங்களிற்கு மனிதாபிமானச் சேவைகளிலும் உடல் நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரண மற்றும் தற்காலிக இருப்பிட வசதிகளையும் செய்து கொடுத்தல், வாழ்வாதாரத்திற்குத் தேவையான சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்றவற்றிற்கு உதவுபவர்களாகவும், அவர்களினால் செய்யாமல் விடப்படும் பகுதிகளில் அப்பேறபட்ட சேவைகளை செய்பவர்களாகவும் சேவை புரிகின்றனர். **(Auxiliaries).**

தேவைக்கு ஏற்ப கிளைகளை ஸ்தாபித்து இயக்கலாம்.அதற்காக யாப்புரீதியாக அங்ககாரம் அங்கததவரிடம் பெறப்பட வேண்டும் எமது நாட்டில் 25 மாவட்டங்களிலும் கிளைகள் அமைக்கப்பட்டு இயங்குவதனால் சிறப்பாக சேவையாற்ற முடிகிறது.

குறிப்பாக யுத்த மேகத்தில் சிக்கி அல்லல்பட்ட மக்களுக்கு தேவையறிந்து சேவையாற்ற முடிந்தது. யாப்பு ரீதியாக பிரிவுகள் தோறும் செஞ்சிலுவைச்சங்க செயற்பாடுகளைச் செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது. மேலும் கிராம மட்டங்களிலேயே செஞ்சிலுவை அமைப்பைததோற்றுவித்து செயற்படவும், அங்கத்தவர்களை அதிகமாக இணைக்கவும் பூலோக ரீதியாக அலகுகளை ஸ்தாபிக்கவும் யாப்பு மூலம் அங்ககாரம் பெறப்பட்டு செயற்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் 14 பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக செஞ்சிலுவைக் காரியாலயம் அமைத்து செயற்படுத்தப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினர் செயயும் பணிகள் சில பின்வருமாறு,

தேசிய வைபவங்கள், சமய மற்றும் விளையாட்டு நிகழ்வுகளின் போது முதலுதவி அளித்தல், அரசாங்க, தனியார், செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு முதலுதவிப் பயிற்சியளித்தல்,

அனர்த்தங்கள் நடைபெறும் போது உதவுதல், அவசர அம்புலன்ஸ் சேவை, நடமாடும் மருத்துவ சேவை,

கடிதச்சேவை, காணாமல் போனோரைத் தேடல்,

நிவாரண உதவிகளை வழங்குதல், இரத்ததான நடவடிக்கை,

ஆரம்ப சுகாதார சேவை,

சிரமதானப் பணிகள்,

சுயதொழிலுக்கான பயிற்சி வழங்கலும், தொடர் நடவடிக்கைகளும்.

அண்மையில் பொம்மைவெளி, மண்டைதீவுப் பகுதிகளில் சமாதான சகவாழ்வு (**Peaceful Co-existence Project**) எனும் திட்டம் வெறறிகரமாக யூ.என்எச்.சீ.ஆர். நிறுவனத்தடன் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் பல்லின, பிற சமயங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக சமாதானமாக வாழ்வது பற்றிய செயற்பாட்டினை வெளிக்கொண்டு வருவதேயாகும். இத்துடன் யூஎன் எச்.சீ.ஆர். உதவியுடன நடமாடும் மருத்துவ சேவை (7மாதங்கள்) மாமுனை, உடுத்துறை, கட்டைக் காடு போன்ற இடங்களில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது.

விரைவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக சுகாதார, உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களிற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது இதில் பாடசாலை ஆசிரியர்கள், தொண்டர்களிற்கு பயிற்சிகளும் வழங்கப் படவுள்ளன.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களும் பயனடைவார்கள். இத்திட்டத்தால் பெரும் நன்மையும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் இரண்டு வருடங்கள் நடைபெறும்.

செஞ்சிலுவைச் சங்கத்தில் எவரும் சாதி, சமய வேறுபாடின்றி அங்கத்தவர்களாக இணைந்து சேவையாற்றலாம்.

உலகளாவிய ரீதியில் சேவையாற்றும் செஞ்சிலுவை, செம்பிறை இயக்கத்தின் வேலைத் திட்டங்களை இன்றையதினம் நினைவு கூர்ந்து சேவைசெய்வோமாக. ★




அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் கண்காட்சி நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கே. குணாள சிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பிரதேச செயலர் செ.சிறினிவாசன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. உமாபாலன் மற்றும் சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவி ஆகியோர் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

# இலவச திருமணப் பதிவு

(தாவடி)

இணுவில் அரிமாக்கழகத்தினரின் ஏற்பாட்டில் விவாகப்பதிவு மேற்கொள்ளாதிருந்த உடுவில் மத்தி கிராமசேவையாளர் பிரிவிவைச் சேர்ந்த 20 தம்பதிக ளுக்கு உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் வைத்து அன்மையில் இலவச திருமணப் பதிவு நடைபெற்றது.

இவ் நிகழ்வில் விவாகப் பதிவாளர் சி.குமாரவேல் யாழ்.மாவட்டப பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர் உட்பட மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

(உ-117)



இணுவில் அரசோலை விநாயகர் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற "சுகவாழ்க்கை பாகம் - II" நூல்வெளியீட்டு விழா நிகழ்வில், நூலாசிரியர் கா.வைத்தீஸ்வரனுக்கு செஞ்சொற் செல் வர் ஆறு.திருமுருகன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் காட்சி.

## பாராட்டு விழாவைத் தொடர்ந்து

# பள்ளிமுனை "சம்பியன் அணி" பாடும் மீனுடன் நாளை மோதும்

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் "இரண்டாம்" பிரிவு கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி



களில் கடந்த முறை சம்பியனாக தெரிவுசெய்யப்பட்ட மன்னார் சென்.லூசியாஸ் கழக அணி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் காட்சி உதைபந்தாட்டப் போடடியில் கலந்துகொள்ளவுள்ளது. சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட இந்த அணி வீரர்களை கௌரவிக்கும் முகமாக யாழ்.விளையாட்டுத துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் போட்டியில் சென்.லூசியஸ் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் ஆட வுள்ளது. இவ் அணி ஆரம்பத்தில் மன்னார் அல்பத்தா விளையாட்டுக்கழகத்தை 3:0என்ற கோல் கணக்கிலும், இலங்கை போக்கு வரத்துச்சபை அணியை 5:0என்ற கணக்கிலும், கண்டி கோல்டன் விளையாடடுக்கழகத்தை 4:0என்ற கணக்கிலும் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இரண்டாம் சுற்றில் பதுளை, பேருவளை, திருகோணமலை என்பவற்றிலிருந்து தெரிவாகிய கழகங்களையும் வெற்றி கொண்டு இறுதிப்போட்டியில் கண்டி சன்றைஸ் கழகத்தை 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போட்டியின் போது தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா உட்பட யா.உ.லீக். பருத்தத்துறை உ.லீக்.வலிகாமம் உ.லீக்கின் முக்கியப் பிரமுகர்களும் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். உதைபந்தாட்ட லீக் மேற்கொண்டு வருகின்ற அதேவேளை, இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடாத்தப்படுகின்ற 19 வயதிற்குடபட்டோருக்கான லீக்குகளின அணிகளுக்கிடையிலான போடடியில் யா.உ.லீக் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப் பட்டுள்ளதாக யா.உ.லீக் தலைவர் தெரிவித்தார்.

(யே)

## லோட்ஸ் மைதானத்தை புனரமைக்கத் திட்டம்

கிரிக்கெற்றின் தாயகம் என வர்ணிக்கப்படும் இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானம் 14.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இங்கிலாந்தில் 114 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த மைதானம் இங்கிலாந்தின் எம்.சி.சி.கழகத்திற்கு சொந்தமானது. இம்மைதானத்தினை புதிய பல நவீன அம்சங்களை உள்ளடைக்கியதாக புனர்நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைகள் யாவும் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கின்ற அவுஸ்திரேலிய பங்களாதேஷ் கிரிக்கெற் அணிகளின் கிரிக்கெற் சுற்றுப் பயணத்திற்கு முன்னதாக நிறைவு பெறுமென எம். சி.சி. யின் பேச்சாளர் இயன்பில்டன் தெரிவித்திருக்கிறார். இதில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஊடகவியலாளர்களுக்கான நிலையமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

(யே-68)

## யாழ்.மாவட்ட துடுப்பாட்ட போட்டிகள் நாளை ஆரம்பம்

யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவு அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டிகள் நாளை காலை 8.30மணிக்கு மல்லாகம் ஆர்.டி.எஸ்.விளையாட்டுக்கழக மைதானத்தில் மீண்டும் ஆரம்பமாக இருக்கின்றன. சென்றவாரம் ஆரம்பமாகி மழைகாரணமாக பிற்போடப்பட்ட போட்டிகளே நாளை முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. அணிக்கு 11 பேர் கொண்ட 15 ஓவா மட்டுப்படுத்தப்பட்ட இந்த கிரிக்கெற் சுற்றுப்போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 14 பிரதேச செயலர் பிரிவு அணிகளும் கலந்துகொள்கின்றன. அந்தவகையில் நாளை நடைபெறவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு,

காலை 8.30மணி

நல்லூர் பிரதேச செயலர்பிரிவு அணி எதிர் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு அணி


காலை 11.00மணி

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு அணி எதிர் வேலணை செயலர் பிரிவு அணி

மாலை 1.00மணி

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு அணி எதிர் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவு அணி.


(யே-68)




1992 வரையும் உலகின் மிக திறமையானவரும் முதல் தரமானவருமாக விளங்கிய பிரபல கார்பந்தய சாரதி சென்னாவின் ஞாபகார்த்ததினம் கடந்தவாரம் கொண்டாடப்பட்டது. 1992ல் கனேடிய கிராண்ட் பிறிக்ஸ் போட்டியின் போது விபத்தில் அவர் உயிரிழந்தார்.

## ஆஸி.இங்கிலாந்து அணி றக்பிக்கு பெரும் வரவேற்பு

கடந்த உலககிண்ண றக்பி இறுதிப் போட்டியில் விளையாடியிருந்த இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் மீண்டும் நடைபெறவுள்ள ஓர் போட்டிக்கான ரிக்கெற்றுக்கள் அனைததும் விற்பனைக்கு விடப்பட்டு ஒரு மணிநேரத்திற்கு உள்ளாகவே விற்று முடிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய றக்பி யூனியன் தெரிவித்திருக்கின்றது. இவ்விரு அணிகளுக்குமிடையிலான இவ் றக்பி போட்டி அடுத்தமாதம் அவுஸ்திரேலியாவில் உள்ள பிறிஸ்பேன் நகரில் நடைபெறவிருக்கின்றது.



இப்போட்டி நடைபெறுவுள்ள விளையாட்டு அரங்கு 56 ஆயிரம் ஆசனங்களைக் கொண்டதாகும். இந்த ஆசனங்கள் அனைத்துக்குமான ரிக்கட்டுக்களே ஒருமணி நேரத்திற்குள் விற்கபப்பட்டுளளதாகத் தொவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான உலககிண்ண றக்பி இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணி 20:17என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று உலககிண்ணத்தை கைப்பற்றியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(யே-68)

## மாகாண மட்ட மேசைப்பந்தாட்ட போட்டிகள் இன்று ஆரம்பம்

வடக்கு-கிழக்கு மாகாண மாவட அணிகள் பங்குபற்றுகின்ற மாகாண மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 9.00மணி முதல் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ.உள்ளரங்கில் ஆரம்பமாகவுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு அவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச் சுற்றுப்போடடி நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் எட்டு மாவட்ட அணிகளும் கலந்துகொள்ள விருக்கின்றன.

சென்ற ஆண்டு வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற இவ் மாகாண மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டிகளின் ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பிரிவிலும் யாழ்.மாவட்ட அணியினர் சம்பியன் பட்டங்களை வென்றெடுத்திருந்தனர்.

(யே-68)

## விளையாட்டுச் செய்திகள்



நேற்று முன்தினம் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டி ஒன்றில் அவுஸ்திரேலியாவின் அந்தனி முண்டின் எதிராளியான மான்னி சியாக்காவுக்கு இடி ஒன்றைக் கொடுப்பதைப் படத்தில் காண்கிறீகள். இப் போட்டிக்கு முன்னர் கடுமையான வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட அந்தனி முண்டினை மான்னி சியாக்கா போட்டியின் போது போட்டுப் புரட்டியெடுத்தார். போட்டி முடிவில் அந்தனி மான்னி, சியாக்கவிடம் தோற்றுப்போனார்.

## யு.பாக்கிண்ண இறுதியில் மார்ஷீல் எதிர் வலென்சியா



தற்பொழுது நடைபெற்றுவரும் யூபாக்கிண்ண உதைபந்தாடட அரையிறுதிப் போட்டிகளின கடைசி அரையிறுதி ஆட்டத்தில் பிரான்சின் மார்ஷீல் அணி ஸ்பெயினின் நியூகாஷில் அணியை 2:0என்ற கோல்கணக்கில் தோற்கடித்து இம் மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதியாட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது.

ஐவரிக் கோஸ்ட் நாட்டின் வீரரும், மார்ஷில் அணியின் நட்சத்திரமுமான டிடியர் ட்ரொக்பா இரண்டு கோல்களைப் போடடு 1992ல் இருந்து தொடர்ச்சியாக நான்காவது தடவையும் மார்ஷில் அணி யூபாக்கிண்ண இறுதி ஆட்டத்தில் நுழைவதை உறுதி செய்தார்.

முக்கிய வீரர்கள் காயமடைந்து ஆட்டத்தில் கலந்துகொள்ளாமையினால் நியூகாஷில் அணி பலத்த சிரமங்களை எதிர்நோக்கியது. 1993ல் யூபாக்கிண்ணத்தைச் சுவீகரித்த மார்ஷில் அணிக்கு இம் முறையும் அதிக சந்தர்ப்பங்கள் இருப்பதாகவே கருதப்படுகிறது. இதேவேளை, சம்பியன் லீக்கிண்ணத்தில் பிரான்சின் மற்றுமொரு அணியான மொனோக்கோ அணி ஷெல்சியா அணியை 5:3என்ற கணக்கில் வீழ்த்தி இறுதியாட்டத்தில் நுழைந்திருப்பது பிரான்சுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

(யே)

# ஈழத்துக் கூத்து மரபை நீடூழி வாழ வைத்த

# வித்தகச் செம்மல் சு.வித்தியானந்தன்

**மறைந்த பேராசிரியர் ச.வித்தியானந்தனின் 80வது பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

1924ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி தெல்லிப்பழையிலே பிறந்த பேராசிரியர் சு.வித்தியானந தன், இலங்கைப் பல்கலைக்கழகத் திலே கலைமாணி, முதுகலை மாணிப் பட்டங்களை பெற்றதுடன் இவர் லண்டன் பல்கலைக்கழகத் திலே கலாநிதிப் பட்டம் பெற்றவர்

விபுலானந்தர் க.கணபதிப்பிள்ளை



வி.செல்வநாயகம் முதலான சிறந்த பேராசிரியர்களின் மாணவனான வித்தியானந்தன் பனமுக ஆளுமை மிக்க பேராசிரியராக விளங்கினார். பழந்தமிழ் இலக்கிய இலக்கணங் களில் ஆழமான புலமைமிக்க இவர், நவீன இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் பின்னணியாக நின்று உழைத்தார். சிறந்த விரிவுரையாள ராகத் திகழ்ந்த இவர் பலருக்கு ஆய்வு வழிகாட்டியாக மாத்திரமன்றி வாழவுக்கும் வழிகாட்டியாக அமைந் தார். கண்டிக்கவேண்டிய இடத் திலே கண்டித்தும் ஊக்கப்படுத்த வேண்டிய இடங்களிலே ஊக் கப்படுத்தியும் மாணாக்கரின் நன் மதிப்பைப் பெற்றவர்.

### வித்தியானந்தம்

தமிழ் இலக்கிய வரலாறு ஈழத்து இலக்கிய வரலாறு, பழந்தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக் கும், இலக்கணச் சிந்தனைகள், நாடடார் வழக்காற்றியல் முதலான துறைகளிலே அவ்வப்போது ஆய வேடுகளிலும், சஞ்சிகைகளிலும், பத் திரிகைகளிலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழியற் கட் டுரைகள் எனும் பெயரில் இவ ரது கட்டுரைகள் சில தொகுக்கப் பட்டுள்ளன. இவரின் மணி விழா வின் போது சில கடடுரைகளைத் தொகுத்து வித்தியானந்தம் எனும் பெயரிலே வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவரது தமிழர் சால்பு என்னும் ஆய்வு நூல் பழந்தமிழ் இலககிய ஆய்வு முயற்சிகளிலே நடைபெற்ற முதன் முயற்சிகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. பேராசிரியர் வித்தி யானந்தன் நாட்டார் வழக்காற்றி யலுக்கு ஆற்றிய பணி மிகவும முக் கியமானது. நாட்டார் பாடல்கள், நாட் டுக் கூத்துக்கள் உள்ளிட்ட நாட் டுப் புறவியலில் இவருக்கு ஈடுபாடு ஏற்படுவதற்கு பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் செல்வாக்கும் காரணமாக லாம். பேராசிரியர் வித்தியானந்த னின் பணிகளிலே முதன்மையான தாக இன்று பேசப்படுவது ஈழத்துத் தமிழ்நாட்டுக் கூத்துக்களுக்கு இவர் அளித்த புதுவாழ்வே எனலாம். ஈழத்துத் தமிழ் மக்களுக்குத் தேசி யக் கூத்து வடிவம் ஒன்றுண்டு என் பதை நிலைநிறுத்திய பெருமை இவரையே சாரும்.

நாட்டுக்கூத்துக்களை நகரத்தாரும் பார்த்து இரசிக்கக்கூடிய வகையிலே செம்மை செய்து பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டே மேடை ஏற்றி பெரும் சாதனை படைத்தார். இவரது மாணாக்கர் பரம்பரையே இன்று ஈழத்துக்கூத்து மரபினைப் பேணி பாதுகாத்து வளர்த்தெடுப்பவர் களாகத் திகழ்கின்றனர்.

ஈழத்தின் பல பாகங்களிலும் வழங்கிய நாட்டுக்கூத்துக்களைப் பிரதி களைத் தேடி ஆராய்ந்து பதிப் பித்து வெளியிட்டார். அலங்கார ரூபன் நாடகம், எண்டிறீக்கு எம்பர தோர் நாடகம், மூவிராசாக்கள் நாட கம், ஞான சௌந்தரி நாடகம் முத லியன இவராலே பதிப்பிக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்களிலும் இவர் அதிக ஈடுபாடுகாட்டித் தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டைப் பேணு வதிலும் முன்னின்றுழைத்தார். பேராசிரியர் வித்தியானந்தனைப் பற்றி பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை குறிப்பிடும் கருத்து இந்த இடத்திலே நினைவு கூரத்தக்கது.

**"சமய அடிப்படையிலே கிறிஸ் தவர்கள் என்றும் சைவர்கள் என்றும் பிரிவினை பேசப்படுவது உண்டு தமிழும் சைவமும் ஒன்று என்றும் சைவப் பண்பாடே தமிழ்ப் பண்பாடு என்றும் கூறப்படுவதுண்டு பேராசிரியர் வித்தியானந்தன் இப்போக்கைக் கண்டித்துள்ளார்."**

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை யின் மதிப்பீடு மிகச் சரியானது என்பதனை அவரது குணவியல் புகளையும் அவரது ஆக்கங்களை யும் அறிந்தோர் அறிவர்.

### நாட்டுப்பாடல்கள் தொகுப்பு

பிரம்ஸ் திசநாயக ஜெபர், வெள்ள வத்தை மு.இராமலிங்கம், குல சபா நாதன், எவ்.எக்ஸ்.சி. நடராசா முத லானோர் அவ்வப்போது ஈழத்து நாட்டார் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளனர். நாட்டுப்புற மக் களிடையே வாய் மொழியாக வழங் கிக் காலவெள்ளத்தினால் அள் ளுண்டு போகும் நாட்டு படல்களைத் தொகுத்து அச்சுவாகனம் ஏற்ற வேண் டும் என்ற அவாவுடன் பேராசிரியர் வித்தியானந்தன் செயற்பட்டார்.

மட்டககளப்பு நாட்டுப்பாடல்கள், மன்னார் நாட்டுப்பாடல்கள் முத லானவற்றைத் தொகுத்து செம் மையான பதிப்புக்களாக வெளி யிட்டார். சாதாரண மக்களிடையே வழங்கும் நாட்டுப்புற வழக்காறு களைத் தொகுத்து வெளியிடவேண் டும் என்ற எண்ணமுடையவராகச் செயற்பட்டுக்கொண்டிருந்தார் என வும் அறிய முடிகின்றது.

சிறந்த விரிவுரையாளராக மாத் திரமன்றி நல்ல ஆய்வு வழிகாட்டி யாகவும் பேராசிரியர் வித்தியானந் தன் திகழ்ந்தார். எனது முதுகலை மாணி ஆய்வுக்கு அவர் ஆய்வு வழிகாட்டியாக இருந்து என்னை யும் எனது ஆய்வையும் நெறிப் படுத்தியமையை இன்று எண்ணிப் பார்க்கின்றேன். கருத்துச் சுதந்திரத் திற்கு அவர் கொடுக்கும் மதிப்பைக் கண்டு வியந்தேன். பேராசிரியர் அ.சண் முகதாஸ் மாமனிதர் வித்தி எனக் குறிப்பிடடது எததுணை பொருத்த மானது என்பதனை அவரது மாணாக் கர்களும் அவருடன் பழகிய வர்களும் நன்கு புரிந்துகொள்வர்.

### சிறந்த நிர்வாகி

பேராசிரியர் வித்தியானந்தன் சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந் தார். யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராகவும் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் துணைவேந்த ராகவும் அவர் ஆற்றிய பணிகளை ஈழத்துக் கல்வியுலகம் என்றும் மறக்கமுடியாது. ஆய்வுத் தளத் திலும், கற்பித்தல் வளத்திலும் மாத்திரமன்றி பௌதீக வளதகி லும் யாழப்பாணப் பல்கலைக்கழகத் தினை வளர்த்தெடுத்த பெருமை இவரைச் சாரும். நாட்டுச் சூழல் அடிக்கடி மாறிக்கொண்டிருந்த போதும் சளைக்காது யாழ்பாணப் பல்கலைக்கழகப் பணியினைத் தொட்டுத் துலக்கிய பெருமகானவர்.

பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் பல்கலைக்கழகப் பணிக ளுக்கு அப்பால் சமய, சமூக பண்பாட்டு அரசியல் நிறுவனங்க ளுடனும் தொடர்புபட்டுப் பணியாற்ற வேண்டும் என்ற கருத்துடையவ ராகத் திகழ்ந்த பேராசிரியர் வித் தியானந்தன் பலவகையான சமூ கப் பணிகளையும் செய்துள்ளார். உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தின இலங்கைக் கிளைத் தலைவ ராக விளங்கிய பேராசிரியர் சு.வித் தியானந்தன் தலைமையில 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத் துலகத் தமிழாராய்ச்சி மாநாடு வரலாற்றுப் புகழ் மிக்கது. இலங் கையின் அரசியல் வரலாற்றிலே திருப்பு முனையாக அமைந்த இம் மாநாட்டில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட் டுரைகளின் பதிப்பாசிரியராகவும் இவரே இருந்து வெளியிட்டுள்ளார்.

மானுடம் தழுவிய மாமனித னாகத் திகழ்ந்த பேராசிரியர் சு.வித் தயானந்தன் ஈழத் தமிழரின் தமி ழியல் வரலாற்றில் மாத்திரமன்றி அரசியல் வரலாற்றிலும் மறக்கக் கூடியவரல்லர் என்பதைக் காலம் நமக்குக் காட்டிக்கொண்டே இருக் கின்றது. □

**கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா**

---

# சமாதான முயற்சிக்கு ஆதரவுவேண்டி

# சந்திரிகா–ரணில் விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க விரைவில் முன்னாள் பிர தமரும், எதிர்க்கட்சித் தலைவரு மான ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத் தவுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற் சிகள் குறித்து அண்மையில் நோர்வேத் தூதுவர்களுடன் நடாத் தபபட்ட பேச்சுவார்த்தைகள் தொடர் பாகவும், நோர்வே தூதுவர்களூடா கத் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியுள்ள நிலைப்பாடு கள் தொடர்பாகவும் இச்சந்திப் பின் போது ஜனாதிபதி, எதிர்க்கட் சித்தலைவர் ரணில்விக்கிரம சிங் கவுடன் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நிறுத்தப்பட்ட இடத் திலிருந்தே ஆரம்பிக்கப்படவேண் டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், விட்ட இடத் தில் இருந்து மீண்டும் பேச்சுவார்த் தைகள ஆரம்பிக்கப்பட்டாலே தமது ஆதரவை வழங்க முடியும் என ரணில் விக்கிரமசிங்கவும் குறிப் பிட்டிருந்தார்.

இந்த விடயம் குறித்து ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி இச் சந்திப்பில் விரிவாக ஆராய் வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்ததைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில், சமாதான முயறசிக ளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவைப் படும் என்று ஜனாதிபதி எதிர்பார்ப் பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ)

# மல்லாவி மருத்துவமனையில்

# 14 ஆயிரத்து 983 பேர் சிகிச்சை

(மருதங்கேணி)

மல்லாவி மருத்துவமனை யில் வெளிநோயாளர் பகுதியில் இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் 14 ஆயிரத்து 983 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள் ளனர்.

இதில் நாயக்கடிக்கு 103 பேரும் காய்ச்சலுக்கு 2 ஆயிரத்து 556 பேரும், வயிற்றோட்டத்திற்கு 116 பேரும், மலேரியாவிற்காக 438 பேரும், சளிக்காய்சலுக்காக ஆயி ரத்து 668 பேரும், காயத்திற்காக 2ஆயிரத்து 397 பேரும், இரத்தச் சோகைக்காக 411 பேரும், சிரங்குக காக 356 பேரும், வேறு நோய்களுக் காக 6 ஆயிரத்து 938 பேரும் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின் றன.

(உ-35)

# இடம்பெயர்ந்த மன்னார் மக்கள்

# மழையினால் பெரும் இன்னல்

(பெரியமடு)

மன்னாரில் தற்பொழுது பெய்து வரும் அடைமழை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பெரும் அவலங்களை எதிர்கொள்கின் றனர்.

கடந்தகால இராணுவ நடவடிக் கைகள் காரணமாக இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் தமது சொந்த இடங்களில் மீளக்குடிய மர முடியாத நிலையில் தற்காலிக வாழ்விடங்களிலும் அகதிமுகாம் களிலும் வாழ்ந்துவருகின்றனர்.

இந்நிலையில் தற்பொழுது பெய்துவரும் அடைமழை காரணமாக இவர்கள வாழ்ந்துவரும் தற்காலிக வாழ்விடங்களுக்குள் மழைவெள் ளம் புகத் தொடங்கி இருப்பதுடன் இவர்களின் வாழ்விடங்களைச் சூழவெள்ளம் தேங்கி நிற்பதால் பல்வேறு சுகாதார சீர்கேடுகளும் ஏற்பட்டு இருக்கின்றன. இதனால் தொற்று நோய்கள் பரவும் அபாய மும் தோன்றி இருக்கின்றது.

இவ்வாறு மக்கள் எதிர்கொண் டுள்ள அவலங்களை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மன்னார் மாவட்ட அரச அதிபரை சம்பந்தப்பட்ட மக் கள் கோரியுள்ளனர்.

(உ-4,63)

# திருமலைப் பொறுப்பாளர் திலக்கின் இடத்திற்கு எழிலன் நியமனம்

(வவுனியா)

வவுனியா மற்றும் திருகோண மலை ஆகியவற்றின தமிழீழ விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் மாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

அந்தவகையில் வவுனியா மாவட்ட அரசயல்துறைப் பொறுப்பாளராக இருநத எழிலன் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாள ராக மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன திருகோணமலை மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளராக இருந்த திலக் நடுவப் பணியகத்திற்கு மாற்றம்செய்யப்பட்டுள்ளார். வவு னியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக தமிழீழ பொருண் மிய நிறுவனத்தைச் சேர்ந்த யாழவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

(உ-4,63)

# மலையகத்தில் இடம்பெற்ற வன்முறைகளைக் கண்டித்து வடக்கு-கிழக்கில் ஹர்த்தால்

(கொழும்பு)

மலையத்தில் தமிழர்களிற்கு எதிராக இடம்பெற்ற வன்முறை களைக் கண்டித்து வடக்கு-கிழக் கில் ஹர்த்தால் நடத்தப்படவுள் ளது.

கந்தப்பொலவில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளின் கார ணமாக இரண்டு தமிழர்கள் கொல் லப்பட்டதோடு, தமிழர்களின் சொத் துக்களும் சேதமாக்கப்பட்டிருந் தன.

கந்தப்பொலவில் தமிழர்களிற் கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளைக் கண்டிப்பதற்கு வடககு-கிழக்கு தமிழர்களும் முன் வரவேண்டும் என மலையக மக் கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் விடுத்த வேண்டு கோளையடுத்தே, ஒருநாள் ஹர்த் தால் ஒன்றினை வடக்கு-கிழக்கில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டு வரு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலையக மக்கள் முன்னணி யின் தலைவர் பெ.சந்திரசேகரன் இது தொடர்பாகக் கருத்து வெளி யிடுகையில்,

வடக்கு-கிழக்கில் ஹர்த்தால் நடத்துவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கை யளவில் இணக்கம் கண்டிருப்பதாகத தெரிவித்துள்ளார்.

அத்துடன், மலையகத்தில் இடம்பெற்ற வன்முறைகளைக் கண்டிக்கும் வகையில் கொழும் பில் கடையடைப்புப் போராட்டம் ஒன்றிணையும், கோட்டை புகை யிரத நிலையத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் தமது கட்சி மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

# அமெரிக்காவின் அதிகூடிய வறுமைப்பட்ட நாடுகள் பட்டியலில் இலங்கையும்

(கொழும்பு)

அமெரிக்காவால் மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவுள்ள 16 வறிய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதற்காக அமெரிக்கா 5 மில்லி யன் அமெரிக்க டொலர்களை ஒதுக் கீடு செய்துள்ளது. இந்நிதி உதவி களின மூலம் மேற்படி 16 நாடுகளி லும் மனிதாபிமானப் பணிகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

அதிகூடிய வறுமைப்பட்ட நாடு கள் என அமெரிக்காவால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இப் 16 நாடுகளி லும் கல்வி, சுகாதாரம், மனித உரிமைகள் உட்பட்ட மனிதாபி மான தேவைகளை மையமாகக் கொண்டே இந்நிதி பயன்படுத்தப் படவுள்ளது.

இவ்வாறு அமெரிக்காவால் தெரிவுசெய்யப்பட்ட 16 வறிய நாடு களின் விபரம் முறையே வருமாறு,

இலங்கை, பெனின், ஹெபர்டோ, கானா, பெசெத்தோ, வடகஸ்கார், மாலி, மொசாம்பிக்கியு, செனகல், அமேனியா, ஜோர்ஜியா, மொங் கோலியா, வனுவாட்டு, பொலீபியா, கொண்டூரஸ், நிக்கோபார். (உ-4)

# ஊழியரை உற்சாகப்படுத்துவது எப்படி

**சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியான அலெக்ஸாண்டர் ஹமில்ரன் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ''அதிகாரியின் சுய அபிவிருத்திக் கடிதம்'' எனும் பதிப்பிலிருந்து ஒரு பகுதியை எமது வாசகர்களுக்காகவும் தொழில கொள்வோருக்காகவும் இங்கு தமிழில தருகிறோம்.**

தங்களுடைய முதலாளி தங்களிடம் எதிர்பார்ப்பது என்ன என்பது புரியாமல் பல தொழிலாளர்கள் தங்களது வேலைத் தளங்களில் திண்டாடுகிறார்கள். சில அதிகாரிகளின் பார்வையில் அல்லது



தொழில் வழங்குநர்களின் பார்வையில், ஒரு நிறுவனத்தின் இலக்குகள் என்பது முக்கியமற்றதாக, அன்றேல் உடனடித் தேவைகளை மட்டும் சமாளித்துச் செல்பவையாக இருக்கும் அதேவேளை, வேறும சில தொழில் வழங்கு நர்களின் பார்வையில் இது வளர்ச்சிக்கான இன்றியமையாத அளவுகோலாக விளங்குகிறது.

## ஆய்வுகளின் உண்மை

இலகக்குகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்ந்த கைத்தொழில் மனோதத்துவ அறிஞரான எட்வின் லொக் என்பார், இவை இரண்டுக்குமான நெருங்கிய தொடர்பை உறுதிப்படுத்தியுள்ளார்.

இவரது ஆய்வின்படி, அதிக கடினமான இலக்குகளை நோக்கி தொழில் செய்பவர்கள் மிகத் திறமையான செயற்பாடுகளை வெளிப்படுத்துபவர்களாகவும், மிகமிகச் சாதாரண இலக்குகளை நோக்கிச் செயற்படுபவர்கள் ஊக்கமற்ற தொழிலாளர்களாகவும் கண்டறியப்பட்டுள்ளனர்.

## உந்து சக்தி எது

மேலும் திட்டவட்டமான வரையறைகளுடனான இலக்குகள் முன்வைக்கப்பட்டு கால வரையறையும் கொடுக்கப்பட்வர்க்ள் எந்தச் சவாலையும் எதிர்கொள்கின்ற அதேநேரம் இலக்குகள் எதுவும் இல்லாமல் ''உங்களால் முடிந்தளவு மனமுவந்து நன்றாகச் செய்யுங்கள்'' போன்ற வரையறை இல்லாத ஒரு இலக்கு வழங்கப்படும் பொழுது அங்கு சாதனைக்குரிய செயற்பாடுகள் எவையும் இடம் பெறமாட்டா.

இவற்றிற்கும் அப்பால் எட்வின் லொக் இன்னுமொரு ஆச்சரியமான உண்மை யைக் கண்டறிந்தார். அதாவது சுய வளர்ச்சிக்கும், நிறைவுக்குமான தேடலில் இருக்கும் தொழிலாளருக்கான வேதனங்களும், போனஸ்களும் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அவர்களது செயற்பாடுகளும் சாதனை மிகுந்ததும், அர்ப்பணிப்பு உள்ளதுமாக அமைந்து இருந்தது.

## லதம் கண்டுபிடித்தவை

**தமிழாக்கம்**
**பேதுரு யேசுதாசன்**

இன்னுமொரு கைத்தொழில் துறை மனோதத்துவ அறிஞரான லதம் என்பார், எட்வின் லொக்கினது ஆய்வு முடிவுகளை மரத்தளபாட உற்பத்தியாளர்களின் நடவடிக்கைகளில் ஒப்பீடு செய்து பார்த்தார். அப்பொழுது தளபாடம் செய்பவர்களுக்கு மரத்தை வழங்குவோரால், போதிய பலகைகளை வழங்கமுடியாதிருப்பதை அவர் அவதானித்தார். அதனை அவர் மேலும் ஆய்வு செய்த பொழுது சில முடிவுகளைக் கண்டறிந்தார்.

## மூவகைத் தொழில் வழங்குநர்கள்

லதம் கண்டுபிடித்த முடிவுகளின்படி மூன்று வகையான தொழில வழங்குநர்களை அவர் அவதானித்தார்.

முதலாவது வகையான தொழில் வழங்குநர் நாள் முழுவதும் தனது தொழிலாளர்களோடு களத்தில் நின்றார். அறிவுறுத்தல்களையும், விளக்கங்களையும் பயிற்சிகளையும் நிமிடத்துக்கு நிமிடம் வழங்கியபடி நின்றார். அவர் அதற்காக சிரமங்களை எடுத்துக் கொண்டார். சில தொழில் சம்பந்தப்பட்ட சஞ்சிகைகளை வாசித்து அறிந்து கொள்வதிலும் சிரமங்களை எடுத்துக் கொண்டார். இந்தக் குழுவினரின் செயற்பாட்டு முடிவுகள் மிகச் சாதாரண தரத்திலேயே அமைந்தன.

இரண்டாவது பிரிவைச் சேர்ந்த தொழில் வழங்குநர் தொழிலாளரைக் களத்திற்குக் கொண்டு வந்துவிட்டார். சிறிது அறிவுறுத்தல்களை வழங்கினார். அந்த நாளுக்கான அல்லது வாரத்திற்கான இலக்குகளையும் குறிப்பிட்டார். களத்தை விட்டுச் சென்றார். மீண்டும் மாலையில் வந்து பார்த்தார். இந்தக் குழுவினரின் செயற்பாடுகள் முதலாவது குழுவினரைவிடச் சிறப்பாக இருந்தாலும் சுமாரான செயற்திறனையே வெளிப்படுத்தின.

மூன்றாவது தொழில் வழங்குநர் தனது தொழிலாளருடன் களத்தில் நின்றார். அந்த நாளுக்கான அல்லது வாரத்திற்கான இலக்குகளை நிர்ணயித்து அவர்களுக்கான அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்பட்டன. நிலைமைகளுக்கு ஏற்ப தருணத்திற்குத் தருணம் சிறு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. முடிவு மிக உன்னதமான தாக இருந்ததோடு அழிவுகள், இழப்பீடுகள் என்பன மிகவும் குறைவாகவே இருந்தது.

இதன்படி ஆக்கபூர்வமான செயற்றிறனைப் பெற்று ஒரு நிறுவனத்தை இலாபகரமாக நடத்துவதற்கு இலக்குகள் நிர்ணயிக்கப்படுவதோடு, இழப்புகள், சேதங்கள் என்பன குறைக்கப்படுவதற்கு தொழில் வழங்குநரோ அன்றேல் உரிய அதிகாரியோ தொழில் நடைபெறும் இடத்தில் பிரசன்னமாயிருத்தல் அவசியம் என்ற முடிவுக்கு லதம் வந்தார்.

மேலும், மரம் வெட்டுபவர்களிடம் ஒரு குறிப்புப் புத்தகமும் அளவு கருவியும் வழங்கப்பட்டது. ஒரு நாளைக்கு எத்தனை மரங்கள் வெட்டப்படுகின்றன எவ்வளவு பலகைகள் வெளியே அனுப்பப்படுகின்றன ஒரு மணித்தியாலத்தினுள் அல்லது ஒரு நாளில் செய்யப்படும் வேலையின் அளவு என்ன என்பது பற்றியெல்லாம் குறிப்பெடுக்கப்பட்டது. விளைவு இந்தப் பகுதியிலும் செயற்றிறன் அதிகரிக்கத் தொடங்கியது. இவ்வாறான நடைமுறைகள் தொழிலாளர்களின் தனிப்பட்ட செயற்றிறனை வெளிக்கொண்டுவருவதற்கும், அவர்களது தனித்துவம் அறியப்படுவதற்கும் வாய்ப்பு வழங்குவதால் அவர்கள் இயல்பாகவே ஊக்கமடைகின்றனர் என்றும் லதம் கண்டறிந்தார்.

இந்த அடிப்படையில் அவர் மேலும் சில விதப்புரைகளை முன் மொழிந்தார். அதாவது பொதுவாக ஒரு தொழில் வழங்குநர் பொறுப்புக்களையும், அதிகாரங்களையும் பிரித்து வழங்கிச் சிறந்த கண்காணிப்பு ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்ளுதல் அவசியமானது என்றும்,

ஒரு தொழில் நிறுவனத்திற்கு வரையறை செய்யப்பட்ட இலக்குகள் இருத்தல் அவசியம் என்றும் குறிப்பிடுகிறார். அதன் அடிப்படையில் அதன் இலக்குகளை அடைய தொழிலாளர்களை ஒழுங்கமைக்கப்பட்ட செயல் நடவடிக்கைகளால் களத்தில் நின்று ஊக்கப்படுத்தல் அவசியம்.

அனைத்து அம்சங்களும் ஓரிடத்தில் குவிக்கப்பட்டு ஒரே விதமான நடைமுறைகள் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வருமாயின் அங்கு உற்சாகத்திற்கும், உத்வேகத்திற்கும் இடமிருக்காது. ⌘



கட்டட நிர்மாணப் பொருட்களை வீதியோரங்களில் பறித்தல் வீதி விபத்துக்களையும், நெரிசல் களையும் உருவாக்கும்.

யாழ்.பிறவுண் வீதியில் போக்குவரத்திற்கு இடையூறு தரும் விதத்தில் பறிக்கப்பட்டுள்ள கட்டடப் பொருள் குவியல்களால் பயணிகள் அவஸ்தைப்படுவதைப் படத்தில் காணலாம்.

படம் : க.பவன்

# பெருந்தெருக்களைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்

## பிரதமருடனான சந்திப்பில் உறுதி

(கொழும்பு)

நாட்டில் உள்ள பெருந் தெருக்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கான நிதி உதவிகளைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி விருப்பம் தெரிவித்துள்ளது.

பிரதமரும், போக்குவரத்து அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட பிரதிநிதி ஒருவர் இது தொடர்பாக நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற பேச்சுவார்த்தையில்,

தென்பகுதிக்கான அதிவேகப் பாதைகளை நிர்மாணிக்கவும் மற்றும் போக்குவரத்துக்கு இடை நிறுத்தப்பட்டுள்ள ஏனைய அதிவேகப் பாதைகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் நிதியுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதி விருப்பம் தெரிவித்திருப்பதாகப் பிரதமர் தெரிவித்தார். நாட்டின் பெருந் தெருக்களைப் புனர்நிர்மாணம் செய்யும்போது உள்நாட்டு நிபுணர்களோடு, உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களையும் இணைத்துக கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (த-121)

## இடமாற்றம்

சாவகச்சேரி மக்கள் வங்கியின் முகாமையாளராகக் கடமையாற்றிய க.பாலச்சந்திரன் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக் கிளைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். யாழ்.பிரதான வீதிக் கிளை முகாமையாளர் எஸ்.சிவபாலன் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (உ-117)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி

# முயற்சியும் வளர்ச்சியும்

கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்

*(நேற்றைய தொடர்ச்சி)*

### கட்டடம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கான அடிக்கல் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நாட்டப்பட்டது. உலக வங்கி பிற கல்வியியற் கல்லூரிகளுக்கு நிதி ஒதுக்கும் போதே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் 465 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது. இக்கல்லூரியின் கட்டட நிர்மாணப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. இக்கல்லூரியின் கட்டட நிர்மாணப் பணிகள் யாவும் 2004 ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும என எதிர்பார்க்கப்படுகிறது.

### கல்லூரியின் வாகன வசதி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பயன்பாட்டுக்கென இரண்டு வாகனங்கள் தருவிக்கப்பட்டுள்ளன. உலக வங்கியின் அனுசரணையுடன் இவ்வாகனங்கள் பெறப்பட்ட போதும் போர்க்காலச் சூழலில் இவ்வாகனங்களை யாழ்ப்பாணத்துக்குத் தருவிப்பதில் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. மேற்படி வாகனங்களை யாழ்ப்பாணத்தில் சுமுகநிலை ஏற்படும் வரை அமைச்சுப்பாவனையில் வைத்திருக்கும் திட்டமும் இருந்தது. இதனை அறிந்த நிர்வாகம் தமக்கென ஒதுக்கப்பட்ட வாகனங்களை கொழும்பில் உள்ள வத்தளைப் பகுதியில் நிறுத்தி வைத்ததுடன் அவற்றை கடல் வழியாக கப்பல் மூலம் எடுத்துவரும் உபாயத்தை வெற்றிகரமாக நடாத்திக் காட்டியது.

மாணவர்களின் பாவனைக்கெனப பேருந்து ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியினை இக்கல்லூரியின் ஆலோசனைச் சபை மேற்கொண்டுள்ளது. அந்த முயற்சியும் விரைவில் வெற்றி பெறும் என எதிர்பார்க்கலாம்.

### கோயில்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தற்போதுள்ள இடத்திற்கு வந்தபோது அங்கு ஏற்கனவே ஒரு வைரவர் கோயில இருந்துள்ளது. கல்லூரியின் கட்டடத் திட்டங்களுக்காக அந்த வைரவரை இடம் மாற்ற எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்தன. இறுதியில அந்த 'முடிமன்னர் வைரவர்' தான் ஏற்கனவே இருந்த இடத்திலேயே இருந்ததுடன் தனக்கென ஒரு சிறிய கோயிலையும் தனது சக்தியால் பெற்றுக் கொண்டார்.

இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை சார்பில் திருவாளர் சி.சீவரெத்தினம் ஐயா அவர்கள் மாணவர்களின் வழிபாட்டுக்கென வித்தக விநாயகப் பெருமான் ஆலயத்தினை அமைத்துக் கொடுக்க முன்வந்தார். அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்கள் குறித்துக் கொடுத்த இடத்தில் இந்த விநாயகர் ஆலயம் அழகுற அமைந்தது. இக்கோயிலை அமைப்பதற்கான பல்வேறு பணிச்சுமைகளையும், செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஐயாவே பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

விநாயகர் ஆலயத்தின் வருகையுடன் கல்லூரியின் வளர்ச்சியிலும் வேகமான முன்னேற்றங்கள் உணரப்பட்டன. விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகத்தை இந்து குரு பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் அவர்கள் தனக்கென ஊதியம் எதுவும் வாங்காமலேயே நடாத்திக் கொடுத்தமையும் விநாயகரின் திருவருளேயாகும்.


### மைதானம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாமல் இருந்தது ஒரு குறையாகவே இருந்தது. இதனை நிவிர்த்தி செய்யும்பொருட்டு கல்லூரியின் முன்பாகவுள்ள 58 பரப்புக் காணியினைக் கொள்வனவு செய்வதென பெற்றோர்களால் உருவாக்கப்பட்ட மைதான விரிவாக்கக் குழு முடிவு செய்தது. இக்கொள்வனவில் இக்கல்லூரியில் பயின்ற மாணவர்களின் பெற்றோர்களே பெரும் பங்கெடுத்தனர் எனக் கூறல் வேண்டும். காணிக் கொள்வனவில் மீதியாக இருந்த 3 இலட்சம் ரூபா பணத்தை ஓர் அன்பர் கடனாக வழங்கி உதவினார். அவருடைய உதவி இம் மைதான விரிவாக்க முயற்சியில் பேருதவியாக அமைந்தது.

தொடர்ந்து பீடாதிபதி அவர்கள எடுத்த முயற்சிக ளின் காரணமாக உலக வங்கியானது இம் மைதானத்தை சமப்படுத்தித் தரவும் பார்வையாளர் அரங்கு ஒன்றைக் கட்டித்தரவும், மதிலைக் கட்டித்தரவும் முன்வந்துள்ளதையும் இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும்.

### கல்லூரிக் கீதம்

கல்லூரியின் தேசிய கதத்தை அமரர் பிரம்ம ஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்கள் எழுதி அதற்கான இசையினையும் அமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இக்கீதத்தின் அமைப்பினையும் அதன் இசை அமைப்பினையும் பலரும் விதந்து குறிப்பிடுகின்றமையினையும் இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும்.



### ஆலோசனைச் சபை

கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள, மற்றும் அபிவிருத்தி முயற்சிகளில் வேண்டிய ஆலோசனைகளை வழங்குவதற்கென ஆலோசனை சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 11 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சபையில் பல்கலைக்கழகம் மற்றும் பிற கல்வி நிறுவனங்களில் பணியாற்றுகின்ற கல்வியாளர்கள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாலோசனை சபையின் ஆக்கபூர்வமான முயற்சிகள் கல்லூரியினை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்கின்றன.

### கல்லூரியின் சபாஷ் போடவைத்த சாதனைகள்

✲ பீடாதிபதி தனியொருவராக வருகை தந்து கல்வியாளர்கள், நலன் விரும்பிகள், சமூகத் தொண்டர்கள் ஆகியோரை இணைத்துக் கல்லூரியை ஆரம்பித்தமை.

✲ கல்வியமைச்சின் எவ்வளங்களும் கிடைக்காத நிலையிலும் அயராது பாடுபட்டு விடுதி வசதியுடன் கூடிய கற்கையை ஏனைய கல்லூரிகள் போன்று ஆரம்பித்தமை.

✲ ஒரு வாரத்துடன் நாட்டின் போர்ச் சூழல் காரணமாக அஸ்தமிக்கப்படவிருந்த கல்லூரியை அரும்பாடுபட்டு கல்விச் சமூகத்தினரின் உதவி பெற்று வேறொரு இடத்தில் தற்காலிகமாக நடாத்தி யாழ்ப்பாணத்தில் அதைத் தக்க வைத்துக் கொண்டமை.

✲ ஊரடங்கு நேரத்திலும் விரிவுரைகள் மற்றும் கல்லூரிச் செயற்பாடுகளில் பீடாதிபதி, விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஈடுபட்டு உழைத்தமை.

✲ விரிவுரையாளர்களை நியமிப்பதில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் காட்டிய ஆதரவு.

✲ விரிவுரையாளர்கள நியமனம் ஆகியும் தவிர்க்க முடியாத சூழ்நிலையால் 6 மாதங்களுக்கு மேலாக சம்பளமில்லாமலே அவர்கள் பணியாறறியமை.

✲ கல்லூரி ஆரம்பித்து முதல வருடத்திலேயே அதன் பணி கண்டு மகிழ்ந்த ஜி.ரி.சற். நிறுவனம் கல்லூரியை முதன்மைக கல்லூரியாக (Pilot College) பிரகடனம் செய்தமை.

✲ அதன் பயனாகக் கல்லூரியின் முகிழ் நிலை மாணவி ஒருவர் ஜேர்மனி நாட்டிற்கு புலமைப் பரிசில் பெற்று சென்று வந்தமை.

✲ நாட்டின் சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கட்டட வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்த நிலையில் கல்லூரி நிர்வாகமும், விரிவுரையாளர்களும், ஆலோசனை சபை உறுப்பினர்களும் இணைநது உலக வங்கியினருடன் தொடர்பு கொண்டு பலத்த சிரமத்திற்குப் பின்னர் 35 மில்லியன் பெறுமதியான கட்டடம் பெற்றுக் கொண்டமை. இது கல்லூரிக்கென ஒதுக்கப்பட்ட (465 மில்.) நிதிக்குப் புறம்பானது என்பது குறிப்பிடத்தக்கது.

✲ கல்லூரிக்குத் தேவையான ஆங்கில விரிவுரையாளராக ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவரை வி.எஸ்.ஓ. பெற்றுக்கொடுத்தமை.

✲ ஆங்கிலத்துறையினை கல்லூரியில் ஆரம்பித்தலுக்கு இருந்த வெளிவாரியான தடையினை நிர்வாகம் சாதுரியமாக வெற்றி கண்டமை.

✲ கல்லூரிக்கு வழங்கப்பட்ட இரண்டு வாகனங்களை அதிகாரிகள் சிலர் போக்குவரத்துக் காரணங்களைக் காட்டி தடுத்து கைப்பற்ற எடுத்த முயற்சியை சாரதி வசதியற்ற நிலையிலும் யாழ். மண்ணுக்குக் கொண்டுவந்து சேர்த்தமை.

✲ கல்லூரி ஆரம்பித்து இரண்டு வருடங்களுக்குள் அயரா முயற்சியால் புதிய கட்டடத் தொகுதியை அமைத்து கல்லூரியை அங்கு தொழிற்பட வைத்தமை.

✲ கல்வி அமைச்சர், செயலாளர், மேலதிகச் செயலாளர், செயற்றிட்டப் பணிப்பாளர், உலக வங்கி வதிவிடப் பிரதி நிதி ஆகியோரைக் கல்லூரிக்கு அழைத்து வந்து கல்லூரியின் முழுக கட்டட வேலைகளையும் ஆரம்பிக்க வழிசெய்து கொண்டமை.

✲ கற்றல், கற்பித்தல், செயற்றிட்டங்கள், செயல் நிலை ஆய்வு, சீருடை போன்றவற்றால் கல்லூரியின் அடையாளத்தை யாழ். மண்ணில் பதித்துக் கொண்டமை.

✲ கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகியவற்றை இறுக்கமாகப் பேணி யாழ். மண்ணின் கலாசார பாரம்பரிய செயற்பாடுகளுக்குத துணை செய்கின்றமை.

✲ கல்லூரியில் கற்றல் கற்பித்தலுக்கான அவதானிப்பு மண்டபம் ஒன்றை நவீன முறையில் அமைத்துக் கொள்ள முயற்சி செய்தமை.

✲ கொழும்பில்மட்டும் நடைபெறவிருந்த ஆங்கில பயிற்சி நெறிக்கான தகுதிகாண் பயிற்சியினை யாழ்ப்பாணத்தில் நடபெற வைத்தமை.

✲ குறுகிய காலத்தில் கல்லூரியிலமாணவர் வழிபாட்டிற்காக கோயில் ஒன்றை அமைத்துக் கொண்டமை.

✲ உலக வங்கியின் துணையுடன் கல்லூரி வாயில் பாதைகளை தரமாக செப்பனிட்டுக் கொண்டமை.

✲ பெற்றோர்கள் உதவியுடன் கல்லூரிக்கென விளையாட்டு மைதானம் ஒன்றை உருவாக்கியமை.

✲ விளையாட்டு மைதானத்தில் பார்ப்போர் கூடம் அமைத்தல், மட்டப்படுத்தல், மதில் அமைத்தல் ஆகிய பணிகளை உலக வங்கியின் ஆணையுடன் செய்து முடிக்க அங்கீகாரம் பெற்றமை.

✲ இலங்கையில் எக்கல்லூரியிலும் இல்லாதவாறு தொகையான பாடநெறிகளில் பயிற்சி நடைபெறுபவை.

✲ கல்லூரியினால் கல்வி ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டமை.

✲ கல்லூரியில் அனுட்டிக்கப்பட்ட நூலக வாரத்தின் போது வீடு வீடாகச் சென்று மாணவர்கள் திரட்டிய நூலைக் கொண்டு நூலகம் அமைக்கப்பட்டமை.

குறுகிய காலத்தில் இச்சாதனைகள எவ்வாறு சாத்தியமாயிற்று. இதனை பீடாதிபதியிடம் கேட்டேன். ''எல்லாம் இறையருள். இறையருளும் நல்லோர் ஆசிர்வாதமும் எமக்குத் தாராளமாகவே கிடைத்தது. கிடைத்த சந்தர்ப்பத்தை இதய சுத்தியுடன் பயன்படுத்திக் கொண்டோம்'' என்றார்.



### முடிவுரை

கல்லூரி தனது நான்காவது ஆண்டை நிறைவு செய்யவுள்ள இவ்வேளையில் அதன் செயற்பாடுகளை, வளர்ச்சிப் போக்குகளை நினைவிற் கொள்ளுதல் அவசியமானதாகும். இக்கல்லூரியின் மிகப்பெரும் வளர்ச்சியின் பின்னாலுள்ள அர்ப்பணிப்புக்களையும், தியாகங்களையும் தமிழ்ச் சமூகம் நினைவிற் கொள்ளல் வேண்டும். பௌதீக வளத்துடன் மட்டுமல்லாது கல்வி வளத்திலும் பெரு வளர்ச்சி கண்டுள்ள இக்கல்லூரி நல்லூர் முருகன் கோயில், யாழ்பாண நூலகம் போல யாழ்பாணத்தின் பிறிதொரு அடையாளமாகவே காணப்படுகின்றது. (முற்றும்)

## இன்று ஒரு தகவல்

# நடப்பது நடக்கட்டும்!

ஒரு ஊரில் ஒருவன் இருந்தான். சாதாரண ஆள் தான். குதிரை வண்டி ஓடிக்கொண்டிருந்தான். எலும்பும் தோலுமாக ஒரு குதிரை. ஓட்டை உடைசலுடன் ஒருவண்டி இது தான் அவனது சொத்து. இதை வைத்தே அவன் காலம் தள்ளிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் அந்த வண்டியில் எங்கேயோ போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்போது அந்தக் குதிரை ஓரிடததில கால் தடுமாறி கீழே விழுந்து கால் முறிந்து விட்டது. ஊரிலுள்ள எல்லோரும் அவனைப் பார்த்து இரக்கப்பட்டார்கள். "ஐயோ பாவம் இப்படி ஆகிவிட்டதே. இனி எப்படித் தான் பிழைப்பு நடத்தப் போகின்றானோ" என்று கூறி பரிதாபப்பட்டனர்.

ஆனால் இவனோ சிறிது கூடப் பதற்றப்படவில்லை. "நடப்பது நடக்கட்டும்! பார்க்கலாம்" என்று கூறிவிட்டு அவன் பாட்டுக்குப் போய்விட்டான். கிராமத்து மக்களுக்கு மிகவும் ஆச்சரியம்.

இவனுடைய அமைதி, நிதானம், அலட்டிக் கொள்ளாத தன்மை இதுதான் அவர்களுடைய ஆச்சரியத்திற்குக் காரணம்.

அவர்கள் என்ன செய்தார்கள் காட்டுக்குப் போய் புதிதாக ஒரு குதிரையைப் பிடித்துக் கொண்டு வந்து அவனிடம் பரிசாகக் கொடுத்தார்கள். இதைச் சிலர் பார்த்தார்கள் அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? "நீ கொடுத்து வைத்தவன் மோசமான குதிரைக்குப் பதில் நல்ல குதிரையே உனக்குக் கிடைத்து விட்டதே" என்றார்கள்.

இப்போதும் அவன் அலட்டிக்கொள்ளவில்லை. 'நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம்' என்று கூறிவிட்டு பேசாமல் போய்விட்டான். சில நாட்களின் பின் காட்டிலிருந்து பிடித்துக் கொண்டுவந்த குதிரை காட்டுக்கே ஓடிப்போய்விட்டது. "ஐயோ பாவம் நாம் கொடுத்த குதிரையும் அவனை விட்டுவிட்டுப் போய்விட்டதே" என்று பரிதாபப்பட்டார்கள்.

இப்போதும் அந்த ஆள் பொறுமையாக "நடப்பது நடக்கட்டும்! பார்க்கலாம்" என்று கூறினான். இன்னும் சில நாட்கள் கடந்தன. ஓடிப்போன குதிரை இன்னும் ஒரு ஐந்தாறு குதிரைகளையும் சேர்த்துக் கொண்டு திரும்பி வந்தது. உடனே ஊர்மக்கள "நீ கொடுத்து வைத்தவன் ஐந்தாறு குதிரைகள் சேர்ந்து கிடைத்து விட்டதே" என்றார்கள்.

இப்போதும் அந்த ஆள் பதற்றப்படவில்லை. வழக்கமாக சொல்வது போலவே சொன்னான். அதற்குப் பின்பு ஒருநாள் அந்த வண்டில்காரனின் ஒரே மகன் அந்த ஐந்தாறு குதிரைகளையும் நன்கு கவனித்துக் கொண்டிருந்தான். வண்டியில் பூட்டப் பழக்கிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு முரட்டுக்குதிரை கொடுத்த உதையில் இவனது கால் முறித்து விட்டது. "ஐயோ உன் பிள்ளைக்கு இப்படி ஆகிவிட்டதே" என்று ஊர்மக்கள் பரிதாபப்பட்டார்கள் .

அப்போதும் இவன் 'நடப்பது நடக்கட்டும்' என்று கூறிவிட்டு மகனைக் கவனித்துக் கொண்டிருந்தான். அதன்பின் திடீரென்று ஒருநாள் அந்தத் தேசத்தில் போர். அடுத்த தேசத்திலிருந்து படையெடுத்து வந்து விட்டார்கள். வீட்டுக்கு ஒரு ஆள் சண்டைக்கு வர வேண்டும் என்று ராஜா உத்தரவிட்டார். வண்டில் காரனின் மகனுக்கு கால் உடைந்ததன் காரணமாக சண்டைக்குப் போக வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. அவனுக்கும் வயதாகி விட்டதால் போக வேண்டிய காட்டாயம் இல்லை. இப்போதும் அவனைப் பார்த்து "நீ மிகவும் கொடுத்து வைத்தவன்" என்றார்களாம். இவனும் வழக்கம் போலவே நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம் எனறு சொல்லிக் கொண்டே அவன் வேலையைப் பார்த்தானாம்.

இது வீடில் தாத்தா பாட்டி சொல்லும் கதை. கதை ஒரு மாதிரியாய் தெரிந்தாலும் இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒருகருத்து தத்துவம் சொன்னால் வாழ்க்கையில் சுக துக்கங்களை நாம் சமமாகப் பார்க்க வேண்டும் என்பதுதான். நடப்பது நடக்கட்டும் என்று நாம் பாட்டுக்குத் தூங்கலாம் என்று நினைக்கக் கூடாது.

ஒருகுதிரைப் பந்தையம் நடந்து கொண்டிருந்தது. ஒருவன் ஒரு குதிரைமேல் பணம் கட்டினான். அது ஜெயிக்கவில்லை. பக்கத்தில் இருப்பவர் சொன்னாராம் "நீ பணம் கட்டினாயே அந்தக் குதிரை ஓடவேயில்லை. அதுபாட்டுக்கு நடந்து போகிறது பார்" என்றாராம். அதற்கு இவன் "நடப்பது நடக்கட்டும்" என்றானாம்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

## ஐக்கிய இலங்கைக்குள் ஆனந்தமாக வாழலாம்

# கத்தோலிக்க ஆயர்மார் சம்மேளனம் மகாநாயக்கர்களைச் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் சகல இனமக்களும் சந்தோசமாக வாழ வேண்டும் என்பதே தமது விருப்பம் என இலங்கைக் கத்தோலிக்க ஆயர்மார் சம்மேளனத்தின் தூதுக்குழுவினர் கண்டியில் உள்ள மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை கண்டி சென்ற கத்தோலிக்க ஆயர்மார் சம்மேளனத்தின் தூதுக் குழுவினர், மல்வத்தை பீட மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய ரம்புக்வெல்லே ஸ்ரீவிபசி தேரர், அஸ்கிரிய பீட மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய உடுகம ஸ்ரீ புத்திரகித்ததேரர் ஆகியோரைச் சந்தித்து, இலங்கையில சமாதானத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கிக் கூறினார்கள்.

மல்வத்தை பீட மகாநாயக்கரான அதிசங்கைக்குரிய ரம்புக்வெல்லே ஸ்ரீவிபசிதேரரை, கத்தோலிக்க ஆயர்மார் சம்மேளனத்தின் தூதுக்குழுவினர் சந்தித்துப்பேசியபோது,

இச்சந்திப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் நாட்டு நலனுக்காக சர்வமதத் தலைவர்கள் இவ்வாறான சந்திப்புக்களை நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இத்தகைய சந்திப்புக்கள் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதில் அளப்பரிய பங்களிப்புகளை வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கத்தோலிக்க ஆயர்மார் சம்மேளனத்தின் தூதுக்குழுவினரைச் சந்தித்த அஸ்கிரிய பீட மகாநாயக்கர் உடுகம ஸ்ரீபுத்தரகித்த தேரர் கருத்து வெளியிடுகையில்,

புராதன காலந்தொட்டு தமிழர்களும் சிங்களவர்களும் மிக ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள்.

இந்த ஒற்றுமை சில அரசியல்வாதிகளால் சின்னாபின்னமாக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் எதிர்வரும் காலத்திலாவது தமிழ்-சிங்கள மக்களின் ஒற்றுமை வலுப்படுத்தப்படவேண்டும்.

இதற்கு பௌத்த, கிறிஸ்தவ மதத்தலைவர்கள் கூட்டு நடவடிக்கை எடுத்து ஏனைய மக்களுக்கு முன்னுதாரணமாகத் திகழவேண்டும் என்றார்.

(உ-60,10)

# விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையை நிராகரிக்க வேண்டும்

## நாட்டுப்பற்றுடைய தேசிய இயக்கம் கோரிக்கை

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி சபையை அரசு நிராகரிக்க வேண்டும் என நாட்டுப்பற்றுடைய தேசிய இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் இறைமையும், மக்களின் ஜனநாயக உரிமைகளும் பாதுகாக்கப்படக் கூடிய வகையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும் கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதான முன்னெடுப்புக்கள் நாட்டை இக்கட்டான சூழ் நிலைக்கு இட்டுச்சென்றன. ஆனால், புதிய அரசாங் கத்தின் சமாதான முன்னெடுப்புகள் நாட்டின் நலனைக கருத்தில் கொண்டே அமையவேண்டும்.

நாட்டின் இறைமைக்கு குந்தகமாக அமையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக் கோரிக்கையை புதிய அரசு நிராகரிக்க வேண்டும் எனவும் இவ் இயக்கம் கோரி யுள்ளது.

இது குறித்து இவ்வியக்கத்தின் பிரதான உறுப்பினர்களான எல்ஏ. குணவஞ்சதேரர், தவசஅமரதேரர், விமல் வீரவன்ச, அர்ஜுண ரணதுங்க ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கை எழுத்திட்டு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

இதில் தமிழ்த் தரப்பிற்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வழங்கப்படுவதால் ஏற்படப் போகும் அபாயங்களிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு புதிய அரசு புத்திக்கூர்மையுடன் செயற்படவேண்டும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-4,63)

## இராசி பலன்

**08.05.2004**

**(சித்திரை 26, சனிக்கிழமை)**
**சதுர்த்தி பிற்பகல் 5.08 வரை**
**மூலம் முன்னிரவு-6.54 மணிவரை**
**இராகுகாலம் 8.54-10.24 மணிவரை**
**சுபநேரம் 2.54-4.24 மணிவரை**
***சங்கடகர சதுர்த்தி விரதம்***

### மேடம்
சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, பிரயாணம், வீண் பயம்.

### இடபம்
முழங்கால் வலி, பொருள் விரயம், கலகம், முயற்சி தாமதம்.

### மிதுனம்
மனோ சௌக்கியம், மாதர் நட்பு, காரிய அனுகூலம், போசன நன்மை.

### கடகம்
நோய் குணமடைதல், வாக்கு மேன்மை, முயற்சி கைகூடும், மன மகிழ்ச்சி.

### சிங்கம்
கௌரவக் குறைவு, பணத்தட்டுப்பாடு, காரிய இடையூறு, அஜீரண ரோகம்.

### கன்னி
தன விரயம், தன்நம்பிக்கைக் குறைவு, பிரயாண நன்மை, ரோக நிலை.

### துலாம்
மனோ தைரியம், நற்கீர்த்தி, காரிய சித்தி, பிரயாண நன்மை.

### விருச்சிகம்
மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்.

### தனுசு
வெகுமானம், நல்ல முயற்சி, பிரயாணம், சிந்தனை மிகுதி.

### மகரம்
சோம்பல் நிலை, கீழ்ப்படிவு, முயற்சி தாமதம், தன விரயம்.

### கும்பம்
ஆனந்தம், சயன சுகம், நண்பர் சந்திப்பு, குடும்ப சுகம்.

### மீனம்
எடுத்த காரியம் கைகூடும், பிரபுத்தனம், நன்கொடை, ஆரோக்கியம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

***வலவன்***

# சிவராமின் வீட்டில் தேடுதல் எல்லை கடந்த ஊடகவியலாளர் அமைப்பு கண்டித்து கடிதம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமின் வீட்டின் மீது ஆயுதங்கள் இருப்பதாக பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்தி அவரின் வீட்டில் தேடுதல் நடத்தி அவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்த பொலிஸார் மீது விசாரணை நடத்துமாறும்,சிவராம் உள்ளிட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுததுமாறும் பிரான்ஸ் நாட்டைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் எல்லை கடந்த ஊடகவியலாளர் அமைப்பு, இலங்கையின் உள்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொடவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள இடம்பெற்றிருக்கின்றன. அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சமாதானச் சூழல் நிலவுகின்ற வேளையில், அதுவும் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்கள் கொழும்பில் தங்கியிருந்த போது இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

சர்வதேச ஊடக தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்ட தினத்தில் இலங்கையில் பொலிஸார் நடந்து கொண்ட முறை கவலையளிப்பதாக உளளது என எல்லை கடந்த ஊடகவியலாளர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிவ்ராமின்வீடு சோதனைக்கு உளளாககப்பட்ட சம்பவம் அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் திட்டமிட்ட நடவடிக்கையாகும் என கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சிவராமின்வீடு சோதனையிடப்பட்டமை கொழும்பிலும் அதனை அண்டிய பகுதியிலும் மீண்டும் சோதனை என்ற பெயரில் இடம்பெற்ற கைதுகள் என்பவற்றைக் கண்டித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர்விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் ஆகியோருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கண்டனங்களிடையே இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படும் என ஊடகததுறை பிரதியமைச்சர் சேகுஇஸதீன் தெரிவித்துள்ளார்.

(உ-121)

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும் -குறள்

வலம்புரி

## ஊதிப் பருத்த காதை

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் சமாதான முன்னெடுப்புக்கள் ஆரம்பித்திருக்கும் வேளையில், நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் ற்றர்சன் இலங்கைக்கு விஜயம் செய்வது ஓர் முக் யமான நிகழ்வாகும்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதான முயற்சியில் அனுசரணை யாளராகச் செயற்பட்ட நோர்வே அரசு, இலங்கை அரசியலில் ஏற்பட்ட தளம்பல்நிலை காரணமாகத் தனது சமாதான முயற்சிகளை இடைநிறுத் தியிருந்தது. சமாதான முயற்சிகளை இடைநிறுத்தி யிருந்த போதிலும், சமாதான முயற்சியிலிருந்து நோர்வே முற்றாக விலகவில்லை என்பதை நோர் வேயின் தற்போதைய முயற்சிகள் உறுதிப்படுத்து கின்றன.

இதுவிடயத்தில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகைதரவுள்ள அதே வேளை, விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் வன்னிக்கு வருகை தந்திருப்பது சமாதானமுயற்சியில் உள்ள நம்பிக் கையை வலுப்படுத்துவதாக உள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதான முயற்சியில் அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வே தனது நல்ல முயற்சிக்காக கல்லெறி பட்ட சம்பவங்களும் உண்டு.

இருந்தும் தனது சமாதான முயற்சியில் இருந்து நோர்வே விலகிக்கொள்ளவில்லையெனில் அஃது அந்த நாட்டின் உயர்ந்த பண்பை எடுத்துக்காட்டுகின்றது.

நோர்வேயின் கண்காணிப்புக்குழுத் தலைவர் விடுதலைப்புலிகளுக்கு உதவிசெய்தார் என்ற குற்றச்சாட்டுக்களின் மத்தியிலும் கூட, நோர்வே தனது பணியை முன்னெடுக்கின்றதென்பதற்காக அந்நாடுபற்றி எதையும், எப்படியும், எவரும் கூற முடியும் எனக்கருதிவிடக்கூடாது.

இலங்கை நாட்டில் நடைபெறுகின்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து மனித அழிவுகளைத் தவிர்ப்பதே நோர்வேயின் நோக்காகும்.

இலங்கையின் சமாதான முயற்சியில் அனுசரணை யாளராகச் செயற்படுவதன் மூலம் நோர்வே நாட் டுக்கு எதுவித அனுகூலங்களும் ஏற்படப் போவதில்லை. இதனை இலங்கையிலுள்ள பேரினவாதக் கட்சிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வே போன்ற நாடுகளைத் தவிர வேறு எந்த நாடும் இவ்வளவு தூரம் பொறுமையைக் கடைப் பிடிக்கமாட்டாது என்பதை இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்வது அவசியமாகும். தனது நாட்டிற்கு இழுக்கு ஏற்படக்கூடிய வகையில், இன்னொரு நாட்டிற்கு உதவி செய்ய வேண்டும் என்ற நிலைமை எந்த நாட்டுக்குமே இல்லை.

ஆனால் தனக்கேற்படக்கூடிய மனஉளைச்சல்கள் - சுயகௌரவத் தாக்கங்கள் என்பனவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு நோர்வே தனது பணியை முன்னெடுத்துள்ளது. இந்நிலையில் ஹெல உறுமய, ஜே.வி.பி போன்ற இனவாதக் கட்சிகள் நோர்வேமீது மீண்டும் கல்லெறியத் தொடங்கி யிருப்பது வேதனைக்குரியதாகும். இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகக்கூறிவரும் ஜே.வி.பிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வின் அழைப்பின் பேரிலேயே நோர்வே அரசு மீண்டும் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள செய்தி தெரி யாமல் போனமை விசித்திரமானதாகும்.

ஜே.வி.பி கூறுவது போல் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடவேண்டிய தேவைப்பாடு நோர்வேக்குக்கிடையாது. ஏனெனில் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதன் மூலம் நோர்வே நாட்டுக்கு எந்த லாபமும் கிடையாது.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலை யிட்டுத்தான் நோர்வே நாடு தனது பலத்தை- பொருளாதாரத்தை- மதிப்பை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்பதல்ல. நோர்வே தலையிடும் அள விற்கு இலங்கை என்ற நாடு செல்வச் செழிப்புக் கொண்ட நாடுமல்ல.

ஆக, ஏதோவொரு குற்றச்சாட்டைச் சுமத்தி, உதவி செய்யவந்த நாட்டிற்கு உபத்திரவம் கொடுத்து அந்நாட்டை வெளியேற்றி சமாதா னத்தைக் குழப்புவதே ஜே.வி.பியின் நோக்க மாகும். இதனை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே நோர்வே மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை ஜே.வி.பி சுமத்திவருவதுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்து சமாதான முயற்சி குறித்துப் பேசாமல நோர்வேயின் செயற்பாடுபற்றி பேசியுள்ளது.

சமாதான முயற்சியில் விருப்புக்கொள்ளாத ஜே.வி.பி நோர்வே மீது தேவையற்ற குற்றச் சாட் டுக்களை முன்வைத்து நோர்வேயை வெளியேற் றுமாயின் இலங்கை இன விவகாரம் ஊதிப் பருத்த காதையாகி, நோர்வேயிடமே மன்னிப்புக் கேட்கும் நிலைமையும் உருவாகலாம்.

# பட்டம் பதவிகளுக்கு ஆசைப்பட்டு கட்சியை விட்டுக்கொடோம்

## மு.கா. எம். பீக்கள் கூட்டாகத் தெரிவிப்பு

(புத்தளம்)

பிரதமர் பதவிகளை எமக்குத்தந்தாலும் கூட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஒருபோதும் வெளியேறிச் செல்லமாட்டோம் என்று ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் 4 பாராளு மன்ற உறுப்பினர்களும் கூட்டாகத் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியுதீன் ,நஜீப அப்துல் மஜீத், அமீர் அலி, பைசர் காசிம் ஆகியோர் கூட் டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக இந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணையப்போவதாக வெளிவந்த செய்தி குறித்து அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் விதமாக வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும்,'

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கை முஸ்லிம் களின் உயிர் மூச்சாகும். பெரும்பான்மைக் கட்சிகளின் செயற்பாடுகளினால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விமோசனத்திற்காக பல உயிர்த் தியாகங்களை செய்து உருவாக்கப்பட்ட இக் கட்சியை அழிப்பதற்கும் அதில் பிளவுகளை ஏற்படுத்தி கூறுபோடுவதற்கும் இனி மேலும் எவரையும் அனுமதிக்க முடியாது. முஸ்லிம் சமூகத் தின் சுயகௌரவம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியுடன் இருக்கிறோம்.

1989 ஆம் ஆண்டில் முதன் முறையாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர் அணியில் இருந்து கொண்டே ஆதரித்து வந்துள்ளது. 1994ஆம் ஆண்டில் ஆட்சியைத் தீர்மானிக்கும் பெரும்பலம வாய்ந்த அணியாக எமது கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கியது.

ஸ்ரீ.சு.கட்சிக்கோ,ஐக்கிய தேசியக் கட்சிக்கோ சோரம் போகின்ற கட்சியாக ஸ்ரீ.மு.காங்கிரஸ் இருக்காது.அது முஸ்லிம் சமூகத்தின் தனித்துவமான போராட்டத்தின் குரலாகவே என்றைக்கும் இருக்கும். அதற்காக எத்தகைய தியாகங்களையும் புரிய நாங்கள் தயராக இருக்கின்றோம்.

அவ்வாறானதொரு நிலையில் எமது வெற்றியை ஜீரணித்துக் கொள்ள முடியாதவர்கள், ஊடகங்கள் மூலம் உண்மைக்குப் புறம்பான செய்திகளை எம் மீது சேறுபூசும் வகையில் வெளியிடுவதானது வேதனைக்குரிய விடயமாகும்.

திட்டமிட்டு சதிகளை செய்யும் சதிகாரர்களை நாங் கள் நன்கறிவோம். மக்கள் ஆணையைப் பெற்ற நாங்கள் இவைகளுக்கு முகம் கொடுக்கத் தாயராக வேயுள்ளோம் என்றுள்ளது. (உ-15)

## போக்குவரத்துச் சேவைகளை சீர்ப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாடடின் போக்குவரத்துச் சேவைகளைச் சீர்ப்படுத்தும் வகையில் போக்குவரத்து அமைச்சா பீல்லிக்ஸ் பெரேரா நடவடிககைகளை மேற்கொண்டு வருகிறார்.

போக்குவரத்துச் சேவைகளுககென நிலையானதும, சீரானதுமான கொளகைகள் கடந்த காலங்களில் அமைக்கப் படடிருக்கவிலலை. இதனால் கடந்த காலங்களில் போக்குவரத்துச் சேவைகளில் சீர்கேடுகள் காணப்பட்டு வந்தன. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களையும் அனுபவித்து வநதனர்.

இதனைக் கருத்தில் கொண்டே நாட்டின் போக்குவரத்துச் சேவைகளைச் சீரபடுத்தவென அமைச்சர் நடவடிக்ககைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதன் பிரகாரம் நாட்டின் போக்குவரத்துச் சேவைகளைச் சீர்ப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட துறைசார் ஊழி யர்களின் நலனையும் கருத்தில் கொண்டு போக்குவரத்துக்கான கொள்கைகள் வகுக்கப்படும் எனவும், இது அடுத்த வாரம் வெளியிட்டு வைக்கப்படுமெனவும் போக்குவரததுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-4,60)

## மாகாண மட்டத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வழிவகுக்கும் நகல் சட்டமூலம்

(கொழும்பு)

மாகாண மட்டத்தில் மேனமுறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வழிவகுக்கும் நகல் சட்டமூலத்தை அரசாங்கம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.

அண்மையில் நீதி அமைச்சருடன் நடத்திய கலந் துரையாடலிலேயே இதற்கான இணக்கம் காணப்பட்டதென பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பணிகளை மாகாண மட்டத் திற்கு விஸ்தரிப்பதால் தேங்கிக்கிடக்கும் வழக்குகளை துரிதமாக விசாரிப்பதற்கு வழிபிறக்கும் என்றும் பிரதம நீதியரசர் நம்பிக்கை வெளியிட்டார். (உ-60,10)

### தினசரி தியானம்

#### விவேகச் சிந்தனைகள்

சூரிய உதயத்திற்கு முன்னரே தயிரி லிருந்து வெண்ணெயைக் கடைந் தெடுக்க வேண்டும். பகல்வேளையில் கடைந்தால் நல்ல வெண்ணெய் கிடைக் காது. அதுபோன்று இளமையிலேயே தங்கள் மனத்தை இறைவன்பால் செலுத்தி பக்தி சாதனைகள் புரிபவர் களே இறைவனை அறிகின்றார்கள்.

சுவாமி விவேகானந்தர்.

## தற்கொலை புரியும் பெண்கள் தொகை இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்கொலை செய்யும பெண்களின் தொகை அதிகரித்து வருவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நாடு முழு வதிலும் 3955பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதில் 3142பேர் பெண்கள்என இலங்கைப் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பெண்கள் அதிகளவில் தற்கொலை செய்வதற்கு பாலியல் பிரச்சினைகள், காதல் ஏமாற்றம், கணவரால் கைவிடப்படுதல் போன்றவற்றால் ஏற்படும மனவிரக்திகளே காரணம் எனவும் சுட்டிக் காட்டப் கிறது. (உ-4,63)

## மாதாந்த இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாதாந்த இசை நிகழ்ச்சியில் நாளை ஞாயிற் றுக்கிழமை பி.ப 4.00 மணி முதல் 7 மணிவரை மன்றக் கலாமண்டபத்தில் கர்நாடக இசைக் கச்சேரி இடமபெறவுள்ளது.

இந் நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட இசை விரிவுரையாளர் சங்கீத வித்துவான் ஏ.கே. கருணா கரனின் பாட்டு பக்கவாத்தியங்கள் சகிதம இடம்பெற வுள்ளது. (உ-18)

## இங்கினியாகலப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

(மொனராகல)

இங்கினியாகலப் பகுதிப் பாதுகாப்பு நடவடிக்கைகளை பொலிஸார் அதிகரித்திருப்பதாக மேல்மாகாண தெற்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பி. பத்திரண தெரி வித்துள்ளார்.

மேற்படி பகுதியில் நேற்று முன்தினம் இருகுழுக் களுககிடையே இடம்பெற்ற கைகலப்பில் ஒருவர் கொல் லப்பட்டதுடன் 6 பேர் காயமடைந்தனர்.

இதனையடுத்து அப்பகுதிகளில் ஏற்பட்ட பதற்ற நிலை யைத் தொடர்ந்தே விசேட பொலிஸ் பாதுகாப்பு நடவடிக் கைகளை தாம் அதிகரிப்பு செய்திருப்பதாகத் தெரி விக்கும் பிரதிப் பொலிஸ் அதிபர் அங்கு விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபட்டிருப்பதாகவும் தற் பொழுது அமைதி நிலவுவதாகவும் மேலும் தெரிவித்துள் ளார்.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பாக மலையக மக்கள்முனனணி தனது ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளதுடன் வன்முறைகள் ஏற்படாது இருப்பதற்கு பொலிஸார் ஆவன செய்ய வேண்டும் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (உ4,64)

## சாட்சியங்களை பதிவுசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல் சமயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான சாட்சியங் களைப் பதிவு செய்வதற்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

விசாரணையின் முதற்கட்டமாக மனுதாரர்களான பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் காலத் தில் ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப் பினர்களும், அமைச்சர்களும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர் என பொதுஜன ஐக்கிய முன்னணியினர் குற்றஞ்சாட்டியதை அடுத்தே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த நடவடிக்கையை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இயங்காதிருப்பதால் மேலதிக விசார ணைகளை உடன் நடத்த முடியாதிருப்பதாகவும் இவ் ஆணைக்குழு மீண்டும் இயங்கத் தொடங்கியதும் மேல திக விசரரணைகள் உடன் ஆரம்பிக்கப்படும் எனவும் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(உ-60,10)

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : muskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர்
T.P : 0602212472
(சு-7311)

# கச்சாய்க் கடலில் மீன்பிடிக்க தம்மை அனுமதிக்குமாறு ஜனாதிபதிக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

கச்சாய் சிறுகடலில் மீன் பிடிக்க அனுமதிக்குமாறு கோரி லிக்கோரியர் மீன்பிடிச் சங்கம் ஜனாதிபதி மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தனித் தனியே நேற்று கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

கடந்த 1995ஆம் ஆண்டு இடப் பெயர்வின் பின்னர் இக்கடலில் மீன் பிடிக்கும் தமது உரிமையை படையினர் மறுத்து வருவதாகவும் தமக்கு எந்தவொரு நிவாரணமும் வழங்கப்படுவதில்லை எனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-43)

# விமான நிலைய சிப்பந்திகள் வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

விமானநிலையச் சிப்பந்திகள் சங்கம் நேற்றுக் காலை முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறது.

இவ்வேலைநிறுத்தப் போராட்டத்தில் சுமார் 600சிப்பந்திகள் ஈடுபட்டுள்ளனர். நீண்ட காலமாக நிலவிவரும் தொழில் பிணக்குகளைத் தீர்த்து வைக்குமாறு கோரியே இவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்று பிற்பகல் வேலை நிறுத்தப் போராட்டம் 2மணிவரை நடைபெறும் என விமானச் சிப்பந்திகள சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இவவேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக ஸ்ரீலங்கன் எயார் லைன் விமான சேவைகள் சில இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று திருச்சிக்குப் புறப்பட இருந்த விமானமும் பிற்பகல் 1.45 மணிக்கு லண்டனுக்குப் புறப்படவிருந்த விமானமும் பிற்பகல் 2.05 மணிக்கு டுபாய் மற்றும் குவைத்திற்குப் புறப்பட இருந்த விமானமும் தமது பறப்புக்களை இடைநிறுத்தின.

மேலும் இலங்கைக்கு வரவிருந்த இரண்டு விமான சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டதாக விமானநிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை விமானச் சிப்பந்திகள் சங்க உறுப்பினர்களுக்கும் ஸ்ரீலங்கன் எயார் லைன் அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இன்றுபிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# அநாதரவான சடலம்

(கண்டி)

கண்டி சங்கராய மாவத்தையில் உள்ள அணைக்கட்டு ஒன்றில் இருந்து அடையாளம் காணப்படாத சடலம் ஒன்றை கண்டிப்பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை க்ண்டிப் பொலிஸார் தற்சமயம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நகரின் பிரதான வீதியில் அநாதரவாகக் கிடந்த சடலம் ஒன்றையும் பொலிஸார் கண்டி மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். (ந-121)

## கண்காணிப்புக் குழுவில் புலிகள் முறைப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இரண்டு விடுதலைப் புலிப் போராளிகள் சுட்டுக்கொல்லப்பட்ட 'சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இம முறைப்பாட்டை மட்டக்களப்பு அரசியல் துறையினர் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரையும் அரங்க அளிக்கையும் இன்று சனிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

குழந்தை ம. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலாநிதி தி. கமலநாதன் வரவேற்புரையை ஆற்றவுள்ளார். பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) நினைவுப் பேருரையை வழங்குவார். (உ-18)

---

## மகசின்...

குணரட்ணம் குருப்புடன் தாம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசியதாக சிவநாதன கிஷோர் தெரிவிததுள்ளார்.

சிறைக் கைதிகளை வேறு சிறைகளுக்கு மாற்ற முடியாதெனவும், அதே சிறைச்சாலையில் அவர்களைப் பாதுகாப்பான அறையில் வைத்திருக்க நடவடிக்கை எடுப்பதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கூறியுள்ளார். (ச)

---

## முஸ்லிம்...

ளதாக ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க அண்மையில நடந்து முடிந்த சபாநாயகர் தெரிவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பத்து உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வைத்தியசாலை இல்லாமல் புங்குடுதீவு மக்கள் அவலம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அரசினர் வைததியசாலை நீண்ட காலமாகவே இயங்காததினால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

1991ம் ஆண்டிலிருந்து இன்று வரை வைத்தியர் இல்லாத காரணத்தினால் வைத்தியசாலை முற்றாக செயல் இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசர நோயாளர்கள் கர்ப்பிணி தாய்மார், வயோதிபர்கள் சிகிச்சை பெறுவதற்கு ஏற்றநிலையில் வைத்தியசாலை இல்லாததினால் புங்குடுதீவு மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். அவசர நோயாளர்களை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டி இல்லாத நிலையும் காணப்படுகிறது.

இதேவேளை தியாகி திலபன் மருத்துவமனை புங்குடுதீவில் திறக்கப்பட்டதிலிருந்து அப்பகுதி மக்கள் பயன்பெற்று வருவதாகவும் அறியபபடுகிறது. (ச)

## வெள்ளவத்தையில் கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

வெள்ளவத்தையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கைகுண்டு தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளதாக வெள்ளவத்தை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவத்தை காலிவீதிச் சந்தியில், இரண்டு குழுக்களுக்கு இடையே இடம் பெற்ற மோதலை அடுத்து இக் கைகுண்டு தாக்குதல் இடம் பெற்றதாக தெரியவருகிறது.(ச-121)

# திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

பளை இத்தாவில் புனித பார் பரம்மா ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி நாளை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை கொடியேறறத்துடன் உற்சவம் ஆரம்பமானது. இன்று மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம் பெறும். (த)

---

## இரகசிய...

இதுபோலவே முன்னர் ஜே.வி.பியினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் நோர்வே அனுசரணையைக் கடுமையாக விமர்சித்து வந்தனர். ஆனால், தற்போது இவ் விடயம் தொடர்பாக மௌனமாக இருக்கிறார்கள். அரசாங்கம் புலிகளுடன் இரகசியத் தொடர்புகளைப் பேணி வருகிறது. இது நல்ல சான்றென்றும் தேரர் தெரிவித்துள்ளார். (த-6)

---

## பாலா...

பாலசிங்கம் உடனடியாகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது பெரும்பான்மைப் பலமற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசுடன் பேச்சுவார்த்தை தொடர்பான அணுகுமுறை எத்தகையதாக இருக்க வேண்டுமென்று விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அடுத்த வார ஆரம்பத்தில் இலங்கைவரவுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்னுடன கலந்துரையாடவேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் தலைவர் பிரபாகரனுடன் பாலசிங்கம் மந்திராலோசனை நடத்தியுள்ளார். இம் மந்திராலோசனையில் தன்னாட்சி அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகம் மற்றும் வெளிநாட்டு நிதி தொடர்பான அம்சங்கள் முக்கிய இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

---

## ஆயுதங்களுடன்...

சநதேக நபரின் வர்த்தக நிலையத்திலிருந்து கைத்துப்பாக்கி ஒன்றினையும், அவரது வீட்டிலிருந்து ஏ.கே. 47ரக தானியங்கி துப்பாக்கி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருந்த வேறு சிலரையும் கைதுசெய்து விசாரணைக்கு உடபடுத்தி வருவதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)



# வலிகாமம், தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

1 தொடக்கம் 4 வரையான வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) M9 ஒப்பந்தகாரர்களிடம் இருந்தும், 5வது வேலைக்கு அலுமினியம் பிரிவிடுதல் வேலையில் தகுதியுள்ள தச்சு வேலை ஒப்பந்தகாரர்களிடம் இருந்தும், மற்றும் பிரதேச சபையில் பதிவுசெய்த ஒப்பந்த காரர்களிடம் இருந்தும் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றது. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணததையும் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 10.05.2004 - 17.05.2004 வரை.
2. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 18.05.2004 நண்பகல் 12 மணி வரை.
3. கேள்வி திறக்கப்படும் திகதி 18.05.2004 பி.ப. 2.00 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப் பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வலி. தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது தலைமைக் காரியாலயத்தில் உளள கேள்விப் பெட்டியில் 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல வேண்டும்.
6. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | Vat வரி 20% |
|---|---|---|---|
| 1.நவாலி ACTM வீதி புனரமைப்பு | 3000 | 500 | 100 |
| 2.மானிப்பாய் செக்காலை வீதி புனரமைப்பு | 2500 | 500 | 100 |
| 3.பண்டத்தரிப்பு பட்டின சந்தை சுற்று மதில் மீள் புனரமைத்தல் | 3000 | 500 | 100 |
| 4.பிப்பிலி மயானமதில் மீள் புனரமைத்தல் | 3500 | 500 | 100 |
| 5.பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தை அலுமினியம் பிரிவிடுதல். | 3500 | 500 | 100 |

பி.விக்டர்,
செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

C- 170




# ஈர விழிகளுடன் 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 02 - 08 - 1942



ஆண்டவன் அடியில் 05 - 06 - 1996

## அமரர் பொன்னர் வெற்றிவேலாயுதம் (விஜயன்)

(முன்னாள் யாழ். செயலக வெளிக்கள உத்தியோகத்தர்)

*அன்பின் திருவுருவாய்*
*அணையா அகல்விளக்காய்*
*எம் இதயத்தில் ஒளிவிடும் - தந்தையே*
*உம்மை யாசிக்கின்றோம்.*

**உங்கள் நினைவுகளுடன் வாடும் :**

மனைவி. வே. காந்திமதி
மகள் - கதிர்காமநாதன் சாரதா B.Sc (கனடா)
மகன் - சுதர்சன் (பல்கலைக்கழகம் - லண்டன்)
மகள் - நிமலதாஸ் சுதர்சினி (தெகிவளை)
மகன் - சுயந்தன் (கொழும்பு)
மகள் - சுகந்தினி
மைத்துனர்-கதிரவேலு- முன்னாள் இலங்கை வானொலி பொறியியலாளர் (கனடா)
நாகலிங்கம் கணேசன்-செயலாளர் வவுனியா நகரசபை
இராசமணி - இருபாலை
சிவபாலன் - ஜேர்மன்

விஜயபவான் இல்லம்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

8387


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.